வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු



மாருதி Money Exchange (Pvt) Ltd.

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 221 4433
076 284 4443

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06

T.P: 011 236 2086

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

MoneyGram money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்

Ria MONEY TRANSFER – ரியா பணப்பரிமாற்றம்

WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 31.03.2023 வெள்ளிக்கிழமை | இதழ் : 113 | பக்கங்கள் : 16

# வவுனியாவில் மக்கள் எழுச்சிப் போராட்டம்!

## நூற்றுக்கணக்கானவர்கள் பங்கேற்பு

வவுனியா, மார்ச் 31

**வவுனியா வெடுக்குநாறிமலை ஆதிசிவன் விக்கிரகங்கள் உடைத்து எறியப்பட்டமையை கண்டித்து வவுனியாவில் நேற்று கவனவீர்ப்பு பேரணி நடைபெற்றது. இந்தப் போராட்டத்தில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்றனர்.**

கடந்த ஞாயிற்றுக்கிழமை - வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்திலிருந்த சிவலிங்கம் மற்றும் விக்கிரகங்கள் அங்கிருந்து பெயர்க்கப்பட்டு வீசப்பட்டிருந்தன. தொல்பொருள் திணைக்களத்தின் கீழிருந்த இந்த ஆலயத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தை கண்டித்தும், ஆலயத்தை மீள அமைக்க வலியுறுத்தியும் நேற்றைய தினம் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.



வவுனியா கந்தசுவாமி கோயிலின் முன்பாக நேற்று முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமான இந்தப் போராட்டத்தில் வடக்கு மாகாணத்தின் பல இடங்களிலும் இருந்தும் மக்கள் எழுச்சியாக திரண்டிருந்தனர்.

கந்தசுவாமி ஆலயத்தில் தேங்காய் உடைத்து வழிபட்டதைத் தொடர்ந்து ஆரம்பமான பேரணி, மணிக்கூட்டு கோபுர சந்தியை அடைந்து, அங்கிருந்து பசார் வீதி ஊடாக 15

## ஐ.எம்.எவ். கடனால் இலங்கையரின் உரிமைகள் பறிபோகும் சூழ்நிலை!

### மனித உரிமைகள் கண்காணிப்பகம்

புதுடில்லி, மார்ச் 31

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ. எம். எவ். ) கடன் வசதியால் இலங்கை மக்களின் உரிமைகள் பறிபோகும் சூழல் ஏற்பட்டுள்ளது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

வருமானத்தை அதிகரிக்கும் கொள்கைகளால் பொருளாதார, சமூக உரிமைகள் மேலும் சிதைக்கப்படாமல் காக்கப்பட வேண்டும் எனவும் ஊழல் எதிர்ப்பு சீர்திருத்தங்கள் மூலம் பொறுப்புக்கூறலை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசிய பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார். 15

## விகாரை கட்டுமான பகுதிக்கு நீதிவான் நேரில் வரவேண்டும்!

### குருந்தூர்மலை ஆதிசிவன் ஆலய தரப்பு கோரிக்கை

முல்லைத்தீவு, மார்ச் 31

குருந்தூர்மலை பகுதிக்கு நீதிவான் நேரில் வந்து அங்கு கட்டுமானங்கள் இடம்பெறுகின்றனவா என்பதை பார்வையிட்டு கட்டளை வழங்க வேண்டும் என்று ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தினர் நீதிமன்றில் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையில் நீதிமன்ற கட்டளையை மீறி பௌத்த விகாரை அமைக்கும் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது என்று குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயம் சார்பில் கடந்த 02.03.2023அன்று நீதிமன்றில் மன்றில் முறைபீடு ஒன்று செய்யப்பட்டது.

இந்நிலையில் குருந்தூர்மலை விவகாரத்தில் 15

## போராட்டத்தில் பங்கேற்றவர்கள் ஆதிசிவன் ஆலயத்திலும் வழிபாடு!



வவுனியா, மார்ச் 31

ஆதிசிவன் ஆலய விக்கிரகங்கள் உடைக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று வவுனியாவில் போராட்டத்தில் ஈடுபட்ட போராட்டக்காரர்கள் வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்துக்கும் சென்று வழிபாடாற்றினர்.

வவுனியா - ஆதி சிவன் ஆலயத்தின் சிவலிங்கம் மற்றும் தெய்வ விக்கிரகங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை 15

## உரத்துக்கும் இனி கியூ. ஆர்.!

கொழும்பு, மார்ச் 31

உரம் மற்றும் கிருமிநாசினிகளை பகிர்ந்தளிப்பதற்காக கியூ. ஆர். குறியீட்டு முறைமையை அறிமுகப்படுத்தவுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் நேற்று நடைபெற்ற ஆய்வு மாநட்டில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 15

### காணி அபகரிப்பை எதிர்த்து

## மட்டு. மாவட்ட செயலகத்தை முற்றுகையிட்டு போராட்டம்!

- பெண் ஒருவர் மருத்துவமனையில்

மட்டக்களப்பு, மார்ச் 31

மட்டக்களப்பில் அபிவிருத்தி திட்டம் என்ற போர்வையில் காணி அபகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து மாவட்ட அரசாங்க அதிபர் பணிமனையை முற்றுகையிட்டு நேற்று போராட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டத்தில் ஏற்பட்ட குழப்பத்தில் பெண் ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.



மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் கூட்டம் நேற்று நடைபெற்ற 15

### வெடுக்குநாறிமலை விவகாரம்

## விசாரணை நடத்த ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, மார்ச் 31

வவுனியா - வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் விக்கிரகங்கள் உடைக்கப்பட்டமை தொடர்பில் விசாரணை நடத்துமாறு தான் உத்தரவிட்டுள்ளார் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் 15

## இலங்கை மனித உரிமை குழு பக்க சார்பாக செயல்படுகிறது

### ஜெனிவாவில் கஜேந்திரகுமார் எம். பி.

ஜெனிவா, மார்ச் 31

இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு நடுநிலையானது என்று ஐ.நா. மனித உரிமைகள் சபையானது, இனியும் பாசாங்கு செய்ய முடியுமா? - என்று ஜெனிவாவில் கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 15

## எதிர்ப்பு போராட்டத்துக்கு தயாராகிறது கூட்டமைப்பு

### முன்னேற்பாட்டு கூட்டம் நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 03

வெடுக்குநாறிமலை ஆலய விவகாரம் மற்றும் புதிதாக அறிமுகமாகவுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் என்பவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து மாபெரும் போராட்டத்துக்கு தமிழ்த் தேசியக் 15

ஈழநாடு



# இப்படியும் நடக்கிறது...!

இங்கிலாந்தின் ஒரு பகுதி யோர்க்சயர். அங்குள்ள எல்லோருமே திறமைசாலிகள். அவர்களைப் பற்றி வழங்கும் துணுக்கு இது.

அந்த ஊர் உழவன் ஒருவன் தன் குதிரையில் ஏர் பூட்டி உழுது கொண்டிருந்தான். திடீரென்று அந்தக் குதிரை இறந்து விட்டது. அதை அங்கேயே விட்டுவிட்டு ஐந்து மைல் தொலைவில் உள்ள தன் நண்பனின் வீட்டை அடைந்தான் அவன்.

நண்பனும் அவனை அன்புடன் வரவேற்றான். இருவரும் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தனர்.

புறப்படும் நேரம் வந்து விட்டது என்பதை உணர்ந்த அவன், "என்னிடம் அழகான பழுப்பு நிறக் குதிரை இருப்பது உனக்குத் தெரியும் அல்லவா?" என்று கேட்டான்.

"நன்றாகவே தெரியும் நல்ல குதிரை" என்றான் நண்பன்.

"அந்தக் குதிரைக்கு பதிலாக உன் வெள்ளைக் குதிரையை மாற்றிக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்" என்றான் அவன்.

"மாற்றிக் கொள்ளலாம். உன் குதிரையின் மீது எனக்கு ஒரு கண் உண்டு" என்றான் நண்பன்.

"பிறகு பேச்சு மாற மாட்டாயே" என்று கேட்டான் அவன்.

"நீ பேச்சு மாறினால்தான் உண்டு" என்று உறுதியுடன் சொன்னான் நண்பன்.

"அப்படியானால் நான் உண்மையைச் சொல்லி விடுகிறேன். என் குதிரை இறந்து நான்கு மணி நேரம் ஆகிறது" என்றான் அவன்.

"அதனால் என்ன? என் குதிரை இறந்து பத்து நாள் ஆகிறது. அதன் தோலைத் தோட்டத்தில் காய வைத்திருக்கிறேன்" என்றான் நண்பன்.

அவர்கள் இருவரும் அண்ணளவாக ஒரே வயதினர். இருவருமே தமிழரசு கட்சியின் பாரம்பரியத்தில் வந்த குடும்பத்தின் வாரிசுகள்.

இதைவிட முக்கியமானது இருவரும் அரசியலுக்குள் நுழைந்தது மகிந்த ராஜபக்ஷவின் கட்சியினூடாக. யுத்தம் முடிவடைந்த சில காலங்களில் வெளிநாடுகளிலிருந்த இருவரும் தாயகம் திரும்பி மகிந்த ராஜபக்ஷவின் கட்சியூடாகவே அரசியலில் பிரவேசித்தார்கள்.

ஆனால், அவர்களால் அந்த அரசியலில் வெற்றிபெறமுடியவில்லை.

இப்போது இருவருமே தமது முடிவை மாற்றி தமிழ் தேசிய அரசியலில் நுழைந்து ஒருவர் வெற்றி பெற்றுவிட்டார். மற்றையவர் தொடர்ந்து முயற்சி செய்துகொண்டிருக்கின்றார்.

இருவரும் இடைக்கிடையே சந்தித்து சமகால அரசியல் பற்றி பேசுவதுண்டு. அண்மையில் இருவரும் சந்தித்தபோது, ஒருவர் கேட்டிருக்கிறார்,

"மச்சான் அவருக்கு அரசிய லில் இப்போது நல்லபெயர் இல்லையே. நீ ஏன் அவரோடு சேர்ந்து இயங்குகின்றாய்? இது உனது அரசியல் எதிர்காலத்துக்கு நல்லதல்லவே".

அதற்கு இவர் சொன்னது, "எனக்கு அரசியலில் ஓர் அடையாளம் தேவைப்பட்டது. தமிழ்த் தேசிய அரசியலில் எனக்கு முழுமையான உடன்பாடு இல்லையென்றாலும், அதனூடாகவே வெற்றிபெற முடியும் என்பதை உணர்ந்ததாலேயே அதில் இறங்கி, நினைத்ததுபோலவே வெற்றி பெறவும் முடிந்தது. அரசியலில் நான் நினைத்த இடத்தை அடைவதற்கு எப்படி போகலாம் என்று நினைத்துக்கொண்டிருந்த போது அவர் வந்து ஏணியாக என் முன்னால் நின்றார். நான் அவர் தோளில் காலை வைத்து ஏறியிருக்கிறேன். நான் நினைத்த இடத்தை அடைந்துவிடுவேன். அப்போது எனக்கு இந்த ஏணி தேவைப்படாதுதானே"

அதற்கு அந்த நண்பர் சொன்னார், "அவர் தனது பெயரை நிமிர்த்துவதற்கு உன்னைப் பயன்படுத்துகிறார் என்றால் நீ இவரை ஏணியாக்கிவிட்டாய் மச்சான்" என்று.

இந்த உரையாடல் பற்றி அறிந்தபோது, அந்த ஏணி இப்படி பலருக்கும் அவர்கள் உச்சத்துக்கு வருவதற்கு உதவித்தான் இருக்கின்றது. ஆனால், அவர்கள் எல்லோருமே தாங்கள் ஏறிவந்த ஏணிக்கு நன்றியாக இருக்காவிட்டாலும் பரவாயில்லை, அதனை தட்டிவிடாமலாவது இருந்திருக்கலாம்.

இந்தக் கதையை அவர் கூறிக்கொண்டிருந்தபோது தான் சில மாதங்களுக்கு முன்னர் லண்டனிலிருந்து வந்திருந்த நண்பர் ஒருவர் சொன்ன கதையொன்று ஞாபகத்துக்கு வந்தது.

மேலேயுள்ள அந்த அரசியல்வாதியும் அவரின் ஏணியும் சில மாதங்களுக்கு முன்னர் லண்டன் சென்றிருந்தனர்.

அப்போது இருவரையும் சில புலம்பெயர் அரசியல் - சமூக செயல்பாட்டாளர்கள் சந்தித்திருந்தனர். அவர்களில் ஒருவர் சொன்ன தகவல்தான் இது. இவர்கள் இருவரும் கதைத்துக் கொண்டிருந்தபோது "ஏணிக்கு" தொலைபேசி அழைப்பு வந்தபோது அவர் எழும்பி வெளியே சென்றுவிட்டார். அவரின் கதிரையில் தற்செயலாக அமர்ந்துவிட்ட அந்த இளம் அரசியல்வாதி, சுதாகரித்துக்கொண்டு அதிலிருந்து எழும்பியபோது சொன்னாராம், "இந்தக் கதிரைதான் எனது குறி. ஆனால், இப்போது அதற்கு அவசரப்படவில்லை" என்று.

யோர்க்சயர் நண்பர்கள் இருவரும்தான் இப்போது நினைவுக்கு வந்தனர்.

- ஊர்க்குருவி

# இந்து ஆலயங்கள் அழிக்கப்படுகையில் இந்தியா மௌனமாக இருப்பது ஏன்?

## ஆறு. திருமுருகன் கேள்வி

யாழ்ப்பாணம், மார்ச் 31

இலங்கை தொடர்பில் இந்தியாவுக்கு அக்கறை இருக்கிறது என்றால் ஏன் இந்து ஆலயங்கள் அழித்தொழிக்கப்படும்போது ஏன் மௌனமாக இருக்கிறீர்கள்? விரைந்து நடவடிக்கை எடுக்க இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகியுங்கள் என்று அகில இலங்கை இந்துமா மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் குறிப்பாக வடக்கு - கிழக்கில் ஆலயங்கள் இடித்தழிக்கப்படுகின்ற சம்பவங்கள் தொடர்பாக அகில இலங்கை இந்துமா மன்றத்தின் உப தலைவர் ஆறு. திருமுருகன் கருத்து வெளியிடுகையில்,

தமிழர் பகுதிகளிலுள்ள ஆலயங்கள் தெய்வ விக்கிரகங்கள் அழிக்கப்படுவது - சேதமாக்கப்படுவது தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. இது மனவேதனை தரும் விடயமாகும். வெடுக்குநாறி மட்டுமன்றி கீரிமலையில் ஆதிசிவன் கோவில் இருந்த இடம் தெரியாது சிதைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து சைவ ஆலயங்களை தொல்லியல் திணைக்களம் அடையாளப்படுத்தி பௌத்த அடையாளங்களாக மாற்றி வருகின்றார்கள்.

இந்தவார அதிர்ச்சியான செய்தியாக வவுனியா வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயம் இடித்தழிப்பு முழு இந்து மக்களையும் சீற்றமடைய வைத்துள்ளது. இலங்கையின் ஜனாதிபதி இந்த விடயத்தில் உரிய நடவடிக்கை எடுத்து யார் இதனை செய்தார்கள் என்பதை அறிந்து உரிய தண்டனை வழங்கவேண்டும்.

உலக அரங்கில் இலங்கை எத்தனையோ கேள்விகளுக்கு பதில் சொல்லவேண்டிய நிலையில் பொருளாதாரத்தில் வலிமை இழந்து பிற நாடுகளை நம்பியுள்ள நிலையில் இத்தகைய அசம்பாவிதங்கள், மதங்களை இனங்களை தூண்டி மக்களுக்குள் குழப்பத்தை ஏற்படுத்துகின்ற நிகழ்ச்சி நிரலாக அமைந்துள்ளது.

இத்தகைய நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்படவேண்டும். இடித்தழிக்கப்பட்ட ஆலயங்கள் உடனடியாக மீள் நிர்மாணம் செய்யப்பட்டு சைவ மக்கள் வழிபடக்கூடிய வகையில் நடவடிக்கைகள்



மேற்கொள்ளப்படவேண்டும்.

பொலிஸார் இதற்கு காவல் கடமையில் ஈடுபட்டு இத்தகைய சம்பவங்கள் நடைபெறாது இருப்பதை உறுதிப்படுத்தவேண்டும்.

இனியும் ஆலயங்கள் இடித்தழிக்கப்படுமேயானால் இந்த நாடு வறுமையையும் துன்பத்தையும் சந்திக்கும். இதிலிருந்து தப்புவதற்கு நீதி தேவன் நிமிர்ந்து நிற்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த விடயத்தில் இந்திய அரசாங்கம் மௌனம் காக்கக்கூடாது. இந்திய அரசாங்கம் இலங்கை விடயத்தில் அக்கறை இருக்கிறது என்றால் இந்த விடயத்தில் ஏன் மௌனமாக இருக்கிறீர்கள் என்பதை உங்களிடம் கேட்கிறேன் - என்றார். (ஐ)

# தொழில்சங்கங்களை முடக்கும் செயல்பாடுகளே முன்னெடுப்பு!

## தொழில்சங்க கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர்

கொழும்பு, மார்ச் 31

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் நிதியை காண்பித்து தொழில்சங்கங்களை முடக்குவதற்கான செயல்பாடுகளையே முன்னெடுத்து வருகின்றது என்று சுகாதார ஊழியர்கள் சம்மேளனத்தின் ஒருங்கமைப்பாளர் ரவி குமுதேஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கமானது தற்போதைய சூழ்நிலையில் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனை பெற்று அந்தக் கடனை நாட்டு மக்களுக்கு காண்பித்து தொழில்சங்கங்களை முடக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது

மறுபுறத்தில் தங்கள் ஆட்சியை தக்கவைக்க நாட்டின் சகல சொத்துகளையும் விற்பனை செய்வதற்கு முயற்சித்து வருகின்றனர். நாட்டின் சொத்துகளை விற்பனை செய்ய வேண்டும் என்பது ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைகளில் ஒன்றாக காணப்படுகின்றது.

நாட்டில் நட்டமடையும் நிறுவனமொன்று இருக்குமாயின் அந்த நிறுவனம் எதற்காக நட்டமடைகின்றது என்பதை முதலில் ஆராய வேண்டும்.

அரசியலில் இருக்கும் மோசடிமிக்க நிர்வாக முறைமை காரணமாக அந்த நிறுவனம் நட்டமடைந்திருக்கும். அந்த நிறுவனத்தையே தனியார் துறைக்கு விற்பனை செய்யும்போது அதற்கூடாக இலாபத்தை பெற்றுக்கொள்ள முடியாது. அரச நிர்வாக முறைமையிலேயே மாற்றங்களை கொண்டு வரவேண்டும்.

அடுத்ததாக அரச சேவையை சிறந்த முறையில் நிர்வகிக்க வேண்டும். அரச நிறுவனங்கள் நட்டமடைந்தமைக்கான பொறுப்பை தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஏற்க வேண்டும் - என்றார்.

# இசைவிழா இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 31

நல்லூர், சட்டநாதர் வீதியிலமைந்த யாழ். இளங்கலைஞர் மன்றத்தின் இன்றைய இசை விழா நிகழ்ச்சிகள்.

பி. ப. 4.30 மணி: மங்கள இசை - பிச்சையப்பா றஜீவன் குழுவினர்.

மாலை 5.40 மணி: வீணை இசை - மஞ்சுசீதா ஜெயதீஸ்

மிருதங்கம் - க. நந்தகுமார்

கடம் - ந. கேதாரநாத்

மாலை 6.15 மணி: பாட்டு - நவரத்தினம் பரந்தாமன்

வயலின் - க. கோபிதாஸ்

மிருதங்கம் - வ. ரமணசர்மா

கெஞ்சிரா - ர. லயசர்மா

இரவு 7.15 மணி: இசை நாடகம் - 'பக்த நந்தனார்' - யாழ். நாட்டார் வழக்கியற் கழகம்.

# நற்சிந்தனை பாராயணம்!

யாழ்ப்பாணம், மார்ச் 31

ஈழத்து சித்தர்களின் பரம்பரையில் முக்கியமானவரான யோகர் சுவாமிகளின் 59ஆவது ஆண்டு குருபூசையை முன்னிட்டு நற்சிந்தனை பாராயண நிகழ்வு நடைபெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை காலை-08 மணி முதல் பிற்பகல்-01 மணி வரை நல்லூர் தேரடி யோகர் சுவாமிகளின் தொண்டர்களும் அடியவர்களும் இணைந்து விசேட நற்சிந்தனை பாராயண நிகழ்வு நல்லூர் அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மட அம்பலவாணர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பாராயண நிகழ்வில் ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொண்டு பயன்பெற முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஈழநாடு
Eelanadu
31.03.2023 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 16

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# பிளவுண்டு செல்லும் உலகில் நீதி?

ஐக்கிய நாடுகள் சபையின் தலையீடுகளிலுள்ள போதாமைகள் தொடர்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேள்வி எழுப்பியிருக்கின்றார். ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் தலையீடுகளிலுள்ள போதாமைகள் தொடர்பில் கடந்த 13 வருடங்களாக பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு தமிழ் அரசியல்வாதிகளும் புலம்பெயர் அமைப்புகளும் கேள்வி எழுப்பியிருக்கின்றன. மறுபுறம் ஐ. நாவோ – அனைத்தையும் கேட்டும் கேட்காமல் இருப்பதும் நமக்கு புதிதல்ல. ஐ. நாவின் தலையிடும் அதிகாரத்திலுள்ள மட்டுப்பாடுகளை அறிந்தவர்களுக்கு இதில், எந்தவோர் ஆச்சரியங்களும் இல்லை.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் முன்னைநாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையே ஐ .நா. மனித உரிமைகள் பேரவையின் இயலாமைகள் தொடர்பில் பேசியிருக்கின்றார். கனடாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார். அதாவது, ஐ. நா. மனித உரிமைகள் பேரவையானது புவிசார் அரசியல் போட்டிகளாலும் குறுகிய தேசியவாத நலன்களாலும் கட்டுப்படுத்தப்படும் ஓர் இடமாகும். இதற்கு தனது சொந்த நாடான தென்னாபிரிக்காவும் விதிவிலக்கல்ல என்றும் குறிப்பிட்டிருந்தார். நவநீதம்பிள்ளை ஆணையாளராக இருந்தபோது, இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். இதன்போது, திருகோணமலையில் இடம்பெற்ற சிவில் சமூக சந்திப்பொன்றின் போது, ஐ. நா. மனித உரிமைகள் பேரவையென்பது ஐக்கிய நாடுகள் சபையல்ல என்று குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையின் இறுதி யுத்தத்தின்போது யுத்த வலயத்துக்குள் அகப்பட்டிருந்த மக்களைப் பாதுகாப்பதில் ஐ. நா. காத்திரமான தலையீடுகளை செய்யவில்லை என்பது இரகசியமான ஒன்றல்ல. அப்போது, ஐ. நாவின் செயலாளர் நாயகமாக இருந்தவரான பான் கீ மூனின் பரிந்துரைக்கு அமைவாக, சார்ள்ஸ் பெரி தலைமையில் இடம்பெற்ற உள்ளக ஆய்வறிக்கையில், ஐ. நாவின் தோல்வி ஏற்றுக்கொள்ளப்பட்டது. 30 பக்கங்களை கொண்ட குறித்த அறிக்கையானது இறுதி யுத்தத்தின்போது, ஐ.நா ‘கட்டமைப்பு சார்ந்து’ தோல்வியுற்றதாக வாதிட்டிருந்தது. அரசாங்கத்தின் அறிவுறுத்தலை தொடர்ந்து, 2008இல், யுத்த வலயத்திலிருந்து ஐ.நாவின் பணியாளர்கள் அனைவரும், மக்களை கைவிட்டு வெளியேறினர். இது தவறானதோர் அணுகுமுறையென்று குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஐ. நா. பணியாளர்களின் வெளியேற்றமானது ராஜபக்ஷக்களின் மிலேச்சத்தனமான அழித்தொழிப்புகளை முன்னெடுப்பதற்கு வாய்ப்பானது. சாட்சியமற்ற யுத்தமொன்றை மேற்கொள்வதற்கான வாய்ப்பை கோட்டாபயவுக்கு வழங்கியது.

இந்த விடயங்கள் மூலம், ஐ. நாவின் பொறுப்பற்ற செயல்பாடுகள் வெளிச்சத்துக்கு வந்தன. ஆனால், இது ஈழத் தமிழர்களுக்கு மட்டுமே இடம்பெற்ற விடயமல்ல. மாறாக, ஐ. நாவின் தோல்விகள் இதற்கு முன்னரும் வேறு சில சந்தர்ப்பங்களிலும் அம்பலப்பட்டிருக்கின்றன. ருவாண்டா இனப்படுகொலையின்போது, குவாட்டமாலா படுகொலைகளின் போதும், ஐ. நாவினால் மக்களை பாதுகாக்க முடியவில்லை.

இன்று நிலைமைகள் இன்னும் சிக்கலடைந்திருக்கின்றன. உலகம் பல துருவங்களாக உடைவுற்றிருக்கும் சூழலில் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான உலகளவிலான கரிசனைகள் பலவீனமடைந்திருக்கின்றன. புவிசார் அரசியல் போட்டியின் காரணமாக, மோசமான மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபடும் நாடுகளைப் பாதுகாக்கும் முயற்சிகளில் சில நாடுகள் ஈடுபடுகின்றன. சர்வதேச அரங்குகளில் இலங்கையை நியாயப்படுத்தும் முயற்சிகளில் சீனா ஈடுபட்டு வருகின்றது.

இது மேற்படி புவிசார் அரசியல் நெருக்கடியின் விளைவாகும். இந்த பின்புலத்தில் நோக்கினால், ஐ. நாவின் தலையிடும் ஆற்றல் முன்னரைவிடவும் பலவீனமடைந்திருக்கின்றது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம், மனித உரிமைகள் தொடர்பில் உறுதியான கரிசனைகளை காண்பிக்கும் போது, மேற்குலகுடன் மோதும் போக்கைக் கொண்டிருக்கும் சீனா, ரஷ்யா, இவற்றுடன் உறவைப் பேணிவரும் நாடுகள் சிலவும் மேற்குலக மனித உரிமைகள் தலையீடுகளில், தலையீடு செய்துவருகின்றன. மனித உரிமைகளை மீறும் அரசுகள், இதனை தங்களுக்கு சாதமாக பயன்படுத்திக் கொள்கின்றன.

# இன்று 125ஆவது பிறந்த நாள் தந்தை செல்வா: சில நினைவுகள்

**மாலி**

*பழைய பாராளுமன்றத்தில், எதிர்க்கட்சி ‘லொபி’ பக்கமுள்ள பலமான அந்தக் கதவுகளை தன்னுடைய நலிந்த கைகளால் தள்ளி திறந்து, சபையினுள் நுழைவார் தந்தை செல்வநாயகம். நுழைந்ததும், வாசலருகிலேயே நின்று சிறிதுநேரம் வலது, இடது பக்கங்களுக்கு திரும்பி, வந்திருப்பவர்கள்மீது ஒரு நோட்டம் விடுவார்.*

*பின்னர், இடதுகையில் ‘பைலை’ உடம்போடு அணைத்துக்கொண்டு, வலதுகையால் ஆசனங்களைப் பிடித்தபிடி, படிக்கட்டுகளாக அமைந்த பேரவை மண்டபத்தினுள் ஒவ்வொரு படியாக தாண்டி, ஒவ்வொரு படிக்கட்டுகளைத் தாண்டும்போதும், அந்தந்த வரிசையில் இருப்பவர்களை இருபுறமும் திரும்பி அவதானித்தபடி, முன்வரிசையிலுள்ள தனது ஆசனத்தை அடைவார்.*

*சில சமயங்களில், தமிழரசுக் கட்சி எம்.பிக்கள் மாத்திரமல்ல, எக் கட்சியைச் சார்ந்தவருமே அவரைப் பிடித்துச் சென்று, அவர் அமர உதவுவார்கள். ஆனால், இதை அவர் அவ்வளவாக விரும்புவதில்லை.*

*ஆசனத்தில் அவர் அமர்ந்ததும் பேரவைச் சேவகர்கள் ஆசனத்திலுள்ள ‘இயர்போனை’ அவரது காதுகளில் இணைத்துச் செல்வார்கள். இத்தனைக்கும், 10 நிமிடங்களுக்குமேல் ஆகிவிடும். பார்வையாளர் கலரியில் அத்தனை கண்களும் இமைகொட்டாமல் அவரையே நோக்கும்.*

*ஆசனத்தில் அமர்ந்ததும் அங்கு வைக்கப்பட்டுள்ள அறிக்கைகளையெல்லாம் அவதானமாக வாசிப்பார். பேச்சுக்களை உன்னிப்பாக கேட்பார்.*

*பேரவைச் செயலாளர்களோடு எதாவது பேசுவதற்காக எழுந்தால். அவர்கள் தாங்களே உடனே எழுந்துசென்று அவரிடம் விடயத்தைக் கேட்பார்கள்.*

*அமரர் திருச்செல்வத்தின் அநுதாபத் தீர்மானம்மீது பேசிய பேச்சுத்தான் பாராளுமன்றத்தில் (தேசிய அரசுப் பேரவை) தந்தை செல்வநாயகத்தின் கடைசிப் பேச்சு. ஆனால், பேரவையில் அவரது கடைசி அரசியல் பேச்சு அதற்கு முன்னதாக 1976 நவம்பர் 19ஆம் திகதி இடம்பெற்றது. அந்த ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட விவாதம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, அந்த விவாதத்தில் அன்று அவர் பேசினார்.*

*மெதுவாகத்தான் பேசினார். சுமார் 40 நிமிடங்களுக்கு மேலாக பேசினார்.*

*அவர் பேச எழுந்ததுமே அரசு, எதிர்க்கட்சி இருதரப்பிலும் அனைவருமே தங்கள் ‘இயர்போன்’களை மாட்டிக்கொண்டு, அவதானமாக கேட்க ஆயத்தமானார்கள்.*

*கைகள் இரண்டையும் இடுப்பில்வைத்தபடி, சபாநாயகரை நோக்கி மிகுந்த உசாராகவே அன்று பேசினார். அவருடைய நிலை் பேச்சு இரண்டுமே அன்று மிடுக்காகத்தான் இருந்தன.*

*‘இந்த நாட்டில் மக்களின் ஆதரவைப் பெற்றிருந்த இரண்டு பிரதமர்களுடனும் தமிழர் பிரச்னைகுறித்து ஒப்பந்தம் செய்தேன் ஆனால், அவர்கள் இருவருமே பின்னர் சிங்கள மக்களுக்குப் பயந்து, அவ்வொப்பந்தங்களை நிறைவேற்றவில்லை. இந்நிலையில், சமஷ்டி கோரிய நாம், அக் கொள்கையினைக் கைவிட்டு, அடுத்த நிலைபற்றி நிதானமாக யோசித்தோம். தனிநாடு ஒன்றுதான் எமக்குள்ள ஒரேவழி என்ற முடிவுக்கு வந்தோம். தனிநாடு அமைப்பதென்பது சுலபமான தொன்றல்ல என்பது எமக்குத் தெரியும். எனினும், இந்த நாட்டில் நாம் சிங்கள மக்களின் பிடியிலிருந்து விடுபடவேண்டும் அல்லது, அழிந்துபோகவேண்டும்.*

*‘நமது மூதாதையர் புத்திசாலிகளாக இருந்தனர். தமக்கென்று ஒரு நாட்டை அவர்கள் வைத்திருந்தார்கள்.*

*‘நாம் பிரிந்துபோவதை இந்த அரசாங்கம் ஏன் மறுக்கிறது என்பது தெரியவில்லை. இந்த அரசாங்கம் மறுத்தாலும் இனி வரப்போகின்ற ஒரு சிங்கள அரசாங்கம் எமது நாட்டைப் பிரித்துத் தரும். அயர்லாந்து நூறு வருடங்களுக்குமேல் போராடி பிரிந்துசென்றது. நாம் எமது முடிவை உலகநாடுகளுக்கு அறிவித்துவிட்டோம். எமது கோரிக்கைகளை அவை ஏற்றுக்கொள்ளும்.*

*‘சாத்வீகமான முறையிலேயே போராடுவோம். இந்த நாட்டில் நாம் உரிமைபெறுவோம் அல்லது, அழிந்துபோவோம். இந்தப் பின்னணியில்தான் எமது கொள்கை இருக்கின்றது. எங்கள் எதிர்காலம் எங்கள் சிந்தனையிலேயே தங்கியிருக்கிறது.’*

*- தந்தை செல்வநாயகத்தின் பேச்சின் சாரம் இப்படித்தான் இருந்தது.*

*தந்தை செல்வநாயகம் பேரவையில் இப்படிப் பேசிவிட்டாரென்பதை அறிந்ததும் அவருக்கு அரசாங்கம் என்ன பதில் அளிக்கப் போகிறது என்பதை அறிவதற்காக சகல உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகையாளர்களும் பத்திரிகை நிருபர்கள் கலரியை ஆக்கிரமித்துக்கொண்டார்கள்.*

*எனினும், அன்றுதான் யப்பான் சென்று திரும்பிய பிரதமருக்கு (திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க) பேராதனை வளாகச் சம்பவம் ஒன்று தொடர்பான பொலீஸ் அட்டூழியங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக அவர் சபையுள் பிரவேசித்ததும், எதிர்க்கட்சியினர் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர். கிரியல்ல எம். பி.யாகவிருந்த வாசுதேவ நாணயக்கார, மலர் வளையம் ஒன்றைச் சபையினுள் பிரதமரின் ஆசனத்தைநோக்கி வைத்துவிட்டு வெளியேறினார்.*

*- இந்த அமளிதுமளிகளில் அரசாங்கம் தந்தை செல்வநாயகத்தின் பேச்சுக்கு அன்று பதிலளிக்கவில்லை. ‘நாட்டில் மொழிப் பிரச்னை இருக்கிறது’ என்றுமாத்திரம் சொன்ன நிதி அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க, அதற்கு தமிழ்த் தலைவர்களையும் குற்றம்சொன்னார்.*

*‘நான் பேச்சுவார்த்தைக்கு வரவில்லை என்று டயஸ் பண்டாரநாயக்க கூறுவது பிழை’ என்று, மறுநாள் தந்தை செல்வாவை அவரது இல்லத்தில் சந்தித்தபோது, அவர் சொன்னார்.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
விருந்தினர் வருகை அதிகரிக்கும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**இடபம்**
2 நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறையும்.

**கடகம்**
வேலைச்சுமையால் உடல் அசதி மனச்சோர்வு வந்து நீங்கும். வாகனத்தை எடுக்கும் முன் எரிபொருள் இருக்கிறதா என பார்த்துக் கொள்ளுங்கள். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம்.

**சிம்மம்**
திட்டமிட்ட காரியங்கள் கைகூடும். சபைகளில் மரியாதை கிடைக்கும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் விஜபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். மதிப்பு மரியாதை கூடும் நாள்.

**கன்னி**
பிள்ளைகளின் பொறுப்புணர்வு அதிகமாகும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள்.

**துலாம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த மனகசப்புகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடிவடையும். மகிழ்ச்சியான நாள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான வேலைகளை பார்க்க வேண்டி வரும். மற்றவர்களின் பிரச்னையில் தலையிடுவதால் வீண் பழிச் சொல் ஏற்படும்.

**தனுசு**
ஆடை ஆபரணம் சேரும். மனைவி வழியில் ஆதரவு பெருகும். தாயாரின் உடல் நிலை சீராகும். சில சூட்சமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தி தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மகரம்**
வாகன வசதி பெருகும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளரின் நம்பிக்கையை பெறுவீர்கள். பெருந்தன்மையுடன் நடந்துகொள்ளும் நாள்.

**கும்பம்**
சேமிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். நட்பு வழியில் நல்லசெய்தி கேட்பீர்கள். குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்து கொள்வார்கள்.

**மீனம்**
பயணங்களால் பயனடைவீர்கள். பழைய கடனைத் தீர்க்க முயற்சிசெய்வீர்கள். தாயாருக்கு மருத்துவசெலவுகள் வந்து போகும். பணப்பற்றாக் குறையை சமாளிப்பீர்கள். உயரும் நாள்.

# அ. தி. மு. கவுடனான கூட்டணி தொடரும்!

## பா. ஜ. க. தலைவர் அறிவிப்பு

புதுடில்லி, மார்ச் 31

"தமிழ்நாட்டில் அ.தி.மு.க., கூட்டணியில்தான் இருக்கிறோம். அ. தி. மு. கவுடனான கூட்டணி தொடரும்" - மத்திய உள்துறை அமைச்சரும் பாரதிய ஜனதா கட்சியின் தலைவருமான அமித் ஷா தெரிவித்துள்ளார்.

டில்லியில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கூறுகையில், "காங்கிரஸ் ஆட்சியின் போது, குஜராத் முதல் - மந்திரியாக இருந்த நரேந்திர



மோடியை போலி 'என்கவுன்ட்டர்' வழக்கில் சிக்க வைக்க சி. பி. ஐ. மூலம் எனக்கு அழுத்தம் கொடுத்தனர். இதையெல்லாம் ஒருபோதும் பா. ஜ. க. பெரிதுபடுத்தவில்லை. மத்திய அமைப்புகளை பா. ஜ. க. தவறாகப் பயன்படுத்துகிறது என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுவது சரியல்ல என்று கூறி னார்.

இதனை தொடர்ந்து அ. தி. மு. க. - பா. ஜ. க. கூட்டணி தொடர்கிறதா என்ற கேள்விக்கு, "தமிழ்நாட்டில் அ.தி.மு.க., கூட்டணியில்தான் இருக்கிறோம். அ. தி. மு. கவுடனான கூட்டணி தொடரும்" என்றும் அவர் கூறினார். (ஐ)

# அரசியல் கட்சி தலைவராக பெண் இருந்தால் கடும் விமர்சனம் வரும்!

## தமிழிசை சௌந்தரராஜன்



நாகர்கோவில், மார்ச் 31

அரசியல் கட்சி தலைவர் பெண்ணாக இருந்தால் கடும் விமர்சனங்களை சந்திக்க வேண்டியுள்ளது என தெலுங்கானா ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

நாகர்கோவிலில் பாடசாலை ஒன்றின் ஆண்டுவிழாவில் பங்கேற்று மாணவர்களின் கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நீங்கள் என்னை போன்று ஒரு பெண். கடுமையான முயற்சியால் சாதித்ததாக கூறினீர்கள். இதற்கு மேல் என்ன சவால்களை பெண்கள் சந்திக்க வேண்டும்?" என்று மாணவி ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர்,

"பெண் என்றாலே சவாலை சந்தித்துத்தான் ஆக வேண்டும். அதுவும் அரசியல் கட்சி தலைவராக இருந்தால் அதைவிட அதிகமாக சந்திக்க வேண்டும். கடும் விமர்சனங்களையும் சந்திக்க வேண்டியுள்ளது. என்னை பற்றி பல்வேறு விமர்சனங்களை கூறினார்கள். நான் எம்.பி.பி.எஸ். படித்துள்ளேன். நன்றாக பேசுவேன். கவிதை எழுதுவேன். நிர்வாகம் செய்வேன். ஆனால், இதை எல்லாம் யாரும் கூறவில்லை. நீ குட்டையாக இருக்கிறாய். கறுப்பாக இருக்கிறாய். சுருட்டை முடியுடன் இருக்கிறாய் என்று தான் கூறினார்கள்.

நல்லதை யாரும் சொல்ல மாட்டார்கள். அடிக்க, அடிக்க எழும் பந்தை போல தன்னம்பிக்கையுடன் உயர வேண்டும். பெண்கள் என்றாலே விமர்சனங்கள் செய்வார்கள். எது இருந்தாலும் நாங்கள் யாருக்கும் குறைந்தவர்கள் அல்ல. அரசியல் துறையாக இருந்தாலும் ஆண்களுக்கு நிகராக மட்டும் அல்லாமல் ஆண்களுக்கு மேல் பணியாற்ற முடியும் என்பதை செயலின் மூலம் காட்ட வேண்டும்", என்றார். (ஐ)

# தமிழை வழக்காடு மொழியாக்க உச்சநீதிமன்றம் மறுத்துவிட்டது!

## மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு



புதுடில்லி, மார்ச் 31

சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக ஆக்க முடியாது என்று உச்சநீதிமன்றம் தெரிவித்து விட்டதாக மக்களவையில் மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு விளக்கமளித்துள்ளார்.

சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக மாற்றக் கோரி விழுப்புரம் மக்களவை தொகுதி உறுப்பினர் ரவிக்குமார் எழுப்பிய கேள்விக்கு மக்களவையில் மத்திய சட்டத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு எழுத்துபூர்வமாக பதிலளித்துள்ளார்.

அதில், தங்களது மாநில உயர் நீதிமன்றத்தில் தாய் மொழியை வழக்காடு மொழியாக ஆக்க வேண்டும் என்று தமிழ்நாடு, குஜராத், சத்தீஸ்கர், மேற்குவங்கம், கர்நாடக மாநில அரசுகள் கோரிக்கை விடுத்தன. உச்சநீதிமன்ற முழு நீதிபதிகள் அடங்கிய கூட்டத்தில் இந்த கோரிக்கைகள் குறித்து பரிசீலிக்கப்பட்டன. இந்த கோரிக்கைகளை ஏற்பதில்லை என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

தமிழ்நாடு அரசு மீண்டும் கோரிக்கை விடுத்ததன் அடிப்படையில், முந்தையை முடிவை மறுபரிசீலனை செய்யும்படி உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியை கேட்டுக் கொண்டதாகவும், ஆனால், உச்சநீதிமன்றத்தின் அனைத்து நீதிபதிகள் அடங்கிய கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் கோரிக்கைக்கு ஒப்புதல் அளிக்கவில்லை என்றும் கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற உத்தரவுகள் மற்றும் சட்டத்துறை சார்ந்த ஆவணங்களை மாநில மொழிகளில் மொழிபெயர்க்க அரசு உறுதி பூண்டிருப்பதாகக் குறிப்பிட்ட அவர், சட்டத்துறை சார்ந்த ஆவணங்களுக்கு என்று அனைத்து மாநில மொழிகளிலும் பொதுவான சொற்களஞ்சியத்தை ஏற்படுத்த ஓய்வுபெற்ற தலைமை நீதிபதி பாப்டே தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

மேலும், உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்களில் அனைத்து நடவடிக்கைகளும் ஆங்கிலத்தில் மட்டுமே இருக்க வேண்டும் என்று அரசியலமைப்பு சட்டம் கூறுவதாக மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

# கடற்படையின் அனுமதியுடனே இனி தொழிலுக்கு செல்லலாம்!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



**யாழ்ப்பாணம், மார்ச் 31**

**வடமராட்சி கடற்தொழிலாளர்கள் கடற்படையின் அனுமதி பெற்றே கடற்றொழிலுக்கு செல்ல வேண்டும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவித்துள்ளார்.**

சுருக்கு வலை மீன் பிடி உள்ளிட்ட சட்டவிரோத தொழில்களை கட்டுப்படுத்தும் நோக்குடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட வுள்ளதாகவும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இடம்பெறும் குற்றச்செயல்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்பில் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற பேச்சின்போதே இந்த முடிவு எட்டப்பட்டது.

மேலும், கடலில் நடைபெறும் சட்ட விரோத மீன் பிடிமுறைமைகள் உள்ளிட்டவற்றை ஏன் கடற்படையினர் கட்டுப்படுத்தவில்லை ? நீரியல் வளத் திணைக்களமும் சட்டவிரோத கடற்றொழில் செய்வோருக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்று கடற்றொழிலாளர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடற்படையினரின் அனுமதி பெற்று அவர்களின் கண்காணிப்புக்கு மத்தியில் கடற்றொழிலுக்கு செல்லும் நடைமுறை முன்னர் இருந்தது. இது தொழிலாளர்களின் சுதந்திரத்தைப் பாதித்தது. இதையடுத்தே இந்த நடைமுறை தளர்த்தப்பட்டது.

இந்நிலையில், பலர் சட்டவிரோத தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதால் மீண்டும் அந்த நடைமுறையை கொண்டுவர திட்டமிட்டுள்ளோம். இந்த நடைமுறையின் சாதக, பாதகம் தொடர்பில் ஆராய்ந்து அதனை தொடர்வதா? அல்லது சட்டவிரோத தொழிலை கட்டுப்படுத்த மாற்று நடவடிக்கை உண்டா என்பது தொடர்பில் ஆராயும் வரையில் கடற்படையின் அனுமதி பெற்ற தொழிலுக்கு செல்ல வேண்டும் - என்று அமைச்சர் கூறினார்.

(ஐ)

# திருட்டு சந்தேக நபர் வடமராட்சியில் கைது

*வடமராட்சி, மார்ச் 31*

வடமராட்சியில் நீண்ட காலமாக திருட்டில் ஈடுபட்டு வந்த பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் திருடிய பொருட்கள் பலவும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி காஞ்சன விமலவீர தெரிவித்துள்ளார்.

நெல்லியடி பகுதியில் இடம்பெற்ற தொடர் திருட்டு தொடர்பில் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளைத் தொடர்ந்தே குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

கைதானவர் கரவெட்டி கிழக்கு, காட்டுப்புலம் பகுதியைச் சேர்ந்த 28 வயது நபராவார்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில் அவரால் திருடப்பட்ட ஒளிப்படக் கருவி, தொலைக்காட்சி பெட்டி, எரிவாயு சிலிண்டர் 2, இரண்டு பவுண் சங்கிலி என்பன கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ -03 - 02)

# மீசாலை பயணிகள் தரிப்பிடம் நகர சபையால் இடித்து அழிப்பு



*தென்மராட்சி, மார்ச் 31*

சாவகச்சேரி நகர சபைக்கு உட்பட்ட மீசாலை சந்தியில் உள்ள 50 வருடங்கள் பழமையான பயணிகள் தரிப்பிடத்தை சாவகச்சேரி நகரசபை முற்றாக இடித்து அழித்துள்ளதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மீசாலை சந்தியில் பழைய புகையிரத நிலையம் அமைந்திருந்த காலத்தில் இருந்து தென்மராட்சி மக்களின் வாழ்வியலோடு ஒன்றித்திருந்த பயணிகள் தரிப்பிடமே நேற்று வியாழக்கிழமை காலை சாவகச்சேரி நகர சபையால் இடித்து அழிக்கப்பட்டது.

1995 இடப்பெயர்விலும், யுத்த காலத்திலும், அதற்கு முன்னரும் யாழ்ப்பாண மக்களின் பல்வேறு வரலாற்று உணர்வுகளின் அடையாளமாக குறித்த பேருந்து தரிப்பிடம் விளங்கியது என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

குறித்த பயணிகள் தரிப்பிடம் ஏ - 9 பிரதான வீதி அகலிக்கப்பட்டபோதும், புகையிரத பாதை அமைக்கப்பட்ட போதும் இரண்டு திணைக்களங்களாலும் இடித்து அகற்றப்படாதிருந்தது. ஆனால் சாவகச்சேரி நகர சபையின் மக்கள் பிரதிநிதிகள் சபை கலைக்கப்பட்டு 10 நாட்களுக்குள் மீசாலையின் அடையாளமாக திகழ்ந்த பயணிகள் தரிப்பிடம் அழிக்கப்பட்டமை தென்மராட்சி மக்கள் மத்தியில் மிகுந்த விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

(ஐ)

# பௌத்தர்கள் திருந்தாவிடின் இலங்கை நாடு உருப்படாது!

## இந்து சமய பேரவை தலைவர்

*யாழ்ப்பாணம், மார்ச் 31*

தம்மை பௌத்தர்கள் என்று கூறிக்கொண்டு பௌத்த தர்மத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை திருத்த உலகில் உள்ள பௌத்தர்கள் முன்வர வேண்டும். இவர்கள் திருந்தாவிட்டால் இந்த நாடு உருப்படாது என்று இந்து சமயப் பேரவையின் தலைவர் ஈசான சிவ சக்திகிரீவன் தெரிவித்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

உலகுக்கு மகோன்னதமான தர்மங்களை போதித்த புத்த பகவானின் புனித நாமங்களை உச்சரித்துக் கொண்டு அவரது போதனைகளை சற்றேனும் மதியாமல், ஏனைய மதத்தவரின் வழிபாட்டிடங்களையும், வழிபாட்டுச் சின்னங்களையும் துவம்சம் செய்கின்றனர்.

அத்தோடு, தேவையற்ற விடயங்களுக்குள் தலையை நுழைத்து பல பௌத்த துறவிகள் ஆர்ப்பாட்டங்கள், அடாவடித்தனங்கள், வன்முறைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் தமது தர்மங்களை மறந்து, புத்த பகவானின் பெயரில் புதிய மதத்தையே ஸ்தாபித்து, அந்த மகானுக்கு களங்கத்தை ஏற்படுத்த முற்படுகிறார்கள்.

இவர்கள் இங்கு இந்துக்களின் வழிபாட்டிடங்களை தகர்த்து விட்டு, புத்த பகவானுக்கு சிலை எழுப்புவதையே தொழிலாக கொண்டுள்ளார்கள். புத்த பகவான் சிலை வழிபாட்டையே விரும்பவில்லை என்ற அடிப்படை அறிவே அற்றவர்களாக காணப்படுகிறார்கள். இவர்களுக்கு உலகில் உள்ள பௌத்தர்கள், பௌத்த தர்மத்தை போதிக்க முன்வருவதே அவசியம் - என்றார்.

(ஐ)






**தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50ஆவது ஆண்டை யொட்டி 'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற தொனிப்பொருளில் கடந்த 24, 25, 26 ஆம் திகதிகளில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் இடம்பெற்ற புத்தக அரங்க விழாவின் காட்சிகள்...!**

# தமிழர் தொன்மை அழிப்புக்கு எதிராக போராடுமாறு கூட்டமைப்பு அழைப்பு!

## புதிய பயங்கரவாத சட்டத்துக்கும் எதிர்ப்பு



கொழும்பு, மார்ச் 31

**தமிழர் தாயகத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப் பட்டுவரும் தொல்லியல் சான்றுகள் அழிப்பு, பௌத்த சின்னங்கள் நிறுவல், குடியேற்றங்கள் உருவாக்கல் என்பவற்றுக்கு எதிராக மக்களை போராடுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது. அத்துடன், புதிய பயங்கவராத எதிர்ப்பு சட்டம் கருத்து சுதந்திரத்தை மறுக்கிறது. இதனை நிராகரிக்கிறோம் என்றும் அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் பேச்சாளர் கு. சுரேந்திரன் நேற்று ஊடகங்களுக்கு விடுத்த செய்தியில் மேலும் தெரிவிக் கப்பட்டவை வருமாறு,

சிங்கள பேரினவாத சக்திக ளால் தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட வகையில் தொடர்ச்சியாக தமிழ் இனத் தின் தொல்லியல் சான்றுகளை அழிப்பதோடு, பௌத்த சின் னங்களை நிறுவி குடியேற்றங்க ளை உருவாக்கி வரும் நிகழ்ச்சி நிரல்களுக்கு கடும் எதிர்ப்பை தமிழ் தேசியக் கூட்டமைப்பு தெரிவிக்கிறது.

அண்மையில், வெடுக்குநாறி மலையில் அமைந்துள்ள ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் முற்றாக விஷமிகளால் சேதமாக்கப்பட் டுள்ளது. இதேபோன்று கீரிமலையில் அமைந்துள்ள சிவனாலயம் சித்தர் மடங்கள் என்பன நிர்மூலமாக்கப்பட்டுள் ளன. நெடுந்தீவு, கச்சதீவு மற் றும் நிலாவரையில் புத்தர் சிலை, குருந்தூர்மலையில் பௌத்த ஆலய கட்டடம், கன் னியா வெந்நீரூற்று தொல்லியல் திணைக்களத்தால் கைப்பற்றல் என்று தொடரும் நடவடிக்கை களை நாம் முற்றாக கண்டிப்ப தோடு அதற்கு எதிர்ப்பும் தெரி விக்கிறோம்.

இதேபோன்று ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் பயங் கரவாத தடைச் சட்டத்தை ஐ. நா. மற்றும் சர்வதேச மனித உரிமை நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு அமைய நீக்குவதாகக் கூறிக்கொண்டு அதைவிடக் கடுமையான மற் றும் கொடுமையான பயங்கர வாத எதிர்ப்புச் சட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வரும் முகமாக, வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டிருக்கும் சட்ட மூலத்தை நாங்கள் முற்றுமுழு தாக நிராகரிக்கிறோம். இதற்கு எமது கடுமையான எதிர்ப்பை யும் பதிவு செய்கிறோம்.

ஏற்கனவே இருந்த சட்ட மூலத்தில் இருக்கும் அனைத்து சரத்துகளுக்கும் மேலதிகமாக அவசரகால சேவைகளாக கரு தப்படும் உணவு உற்பத்தி, விநி யோக சேவைகள் என இன்னோ ரன்ன சேவைகளில் ஈடுபடும் நிறுவனங்களோ அதைச் சார்ந்த ஊழியர்களோ எந்தவிதமான கருத்து தெரிவிப்பதையும் போராட்டங்களில் ஈடுபடுவ தையும் இந்தச் சட்டமூலம் கட் டுப்படுத்துகிறது.

அவசரகால சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்படும் அனைத்து சேவைகள் மற்றும் அமைப்புகளைச் சார்ந்தவர்க ளும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் கீழ் செயலற்றவர்க ளாக ஆக்கப்படுகின்ற அபாய கரமான நிலையை இந்த சட்ட மூலம் தோற்றுவிக்கிறது.

இது அடிப்படை மனித உரி மைகள் மீறலை முற்றுமுழுதாக மீறுவதோடு தனிமனித பேச்சு சுதந்திரத்தையும் குழி தோண் டிப் புதைக்கும் நடவடிக்கை யாக நாம் நோக்குகிறோம். இந்தச் சட்ட மூலம் நிறைவேற் றப்படுமாக இருந்தால் நாம் சுவாசிப்பதற்கும் உணவு உண்ப தற்கும் தவிர வேறு எதற்கும் வாய் திறக்க முடியாதவர்களாக சர்வாதிகார ஆட்சியின் கீழ் வாழ்வதற்கு நிர்பந்திக்கப்படு வோம். எமது உரிமை சார்ந்த விடயங்களைப் பற்றி குரல் எழுப்பவோ அடக்குமுறைகள் ஆக்கிரமிப்புகளைப் பற்றி கருத்து தெரிவிக்கவோ முடியாத வர்களாக ஆக்கப்படுவோம்.

இவற்றை எதிர்த்து எமது கண்டனங்களை பதிவு செய்வ தோடு மாத்திரமல்லாமல் ஒட்டுமொத்த தமிழ் மக்க ளையும் அணிதிரட்டி இவற் றுக்கு எதிரான போராட்டங் களை முன்னெடுக்க மக்களை அழைக்கிறோம். கட்சி பேதங் கள், அரசியல் கோட்பாடுகள், சின்னங்கள் என்பவற்றைத் தாண்டி தமிழ்த் தேசிய அரசிய லில் பயணிக்கும் அனைத்து அரசியல் கட்சிகள், சமூக அமைப்புக்கள், தொழிற்சங் கங்கள், மற்றும் மதத் தலைவர் கள் அனைவரையும் எம்மோடு கைகோர்த்து வலுவான போராட் டங்களை முன்னெடுக்க அறை கூவல் விடுக்கிறோம் - என்றுள் ளது. (ஐ)

# மணல் அகழ்வுக்கு எதிராக மன்னாரில் கவனவீர்ப்பு!



மன்னார், மார்ச் 31

மன்னாரில் சட்டவிரோத மணல் அகழ்வுக்கு எதிரான கவனவீர்ப்பு போராட்டம் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்றது.

இந்தப் போராட்டம் மன் னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக தமிழ்த் தேசிய வாழ்வு ரிமை இயக்கத்தின் ஏற்பாட் டில் அதன் தலைவர் வீ.எ ஸ். சிவகரன் தலைமையில் நடை பெற்றது.

மன்னாரிலுள்ள பலதரப் பட்ட அமைப்புக்களின் முக்கி யஸ்தர்களும் மதத் தலைவர்க ளும் கவனவீர்ப்பு போராட்டத் தில் கலந்து கொண்டனர். இவர்கள் பலதரப்பட்ட வாசகங்கள் கொண்ட பதாதை களை தங்கள் கையிலேந்திய வாறு போராட்டத்தில் ஈடு பட்டிருந்தனர்.

"அரசியல்வாதிகளே நீங்க ளும் இதற்கு உடந்தையா?" "எதிர்கால சிந்தனை அற்ற பொறுப்பற்ற அரச அதிகாரி களே", "மன்னாரை பாலைவன மாக்கப் போகின்றீர்களா?", "விவசாய நிலங்கள் உவராகி விட்டன் வாழ்வுக்கு வழி யேது?", "சட்டத்தரணிகளே மண் மாபியாக்களை காப்பாற் றாதீர்கள்" இவ்வாறு கொண்ட வாசகங்கள் ஏந்திய வண்ணம் காணப்பட்டனர்.

"இயற்கையே பேரிறைவன் மண்ணும் மரமும் இல்லையேல் மனிதன் உயிர் வாழ முடி யாது. இயற்கைக்கு எதிரான மனிதனின் செயல்பாடே இயற்கை பேரிடருக்கு அடிப்படை ஆகவே இயற்கையை காப்போம்" என்ற தொனிப்பொருளிலும் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றதுடன் பொது மக்களுக்கு இது தொடர்பாக துண்டு பிரசுரங்களும் விநியோ கிக்கப்பட்டன. (ஐ)

# கொழும்பு - மாலபே ரயில் திட்டத்தை மீள ஆரம்பிப்பது குறித்து முடிவில்லை!

## ஜப்பான் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 31

கொழும்பு - மாலபே இடையிலான இலகு ரயில் சேவைத் திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் இதுவரை தீர்மானிக்கப்பட வில்லை என்று இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் ஹிடேகி மிசுகோஷி தெரிவித்துள்ளார்.

இலங்கை மோட்டார் வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் நடந்த நிகழ்வு ஒன்றில் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலகு ரயில் திட்டம் தொடர்பில் இன்னும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. ஆனால், இவை அனைத்தும் இலங்கை அரசாங்கத்தின் சீர்திருத்தங்கள் எவ்வாறு முன் னெடுக்கப்படுகின்றன மற்றும் ஜப்பான் வர்த்தக சமூகத்தின் நம்பிக்கையை இலங்கையால் மீண்டும் பெற முடியுமா என் பதை பொறுத்தது என்றும் தெரிவித்துள்ளார்.

ஜப்பானின் ஜைக்கா நிறுவ னத்தால் 22 இலட்சம் டொலர் கடன் திட்டத்தின் கீழ் கொழும்பு கோட்டையிலிருந்து புத்தளம் மாலபே வரையான இலகு ரயில் சேவைத்திட் டத்தை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

கொழும்பில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக மக்களுக்கு சிறந்த போக்குவரத்து வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக கடந்த 2016ஆம் ஆண்டு ஜப் பான் கடன் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட் டத்தை 2020ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம் தன்னிச் சையாக இரத்து செய்தது.

ஜைக்கா நிறுவனத்தார் 12 ஆண்டுகள் சலுகை காலம் அடங்கலாக, 40 ஆண்டுகளுக்கு 0.1 சதவீத வட்டியுடன் கடனை மீள செலுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டிருந்தது.

எவ்வாறிருப்பினும், இதனை ஏற்றுக்கொள்ளக்கூடிய எவ்வித காரணமும் இன்றி, இலங்கை அரசாங்கம் இரத்து செய்தி ருந்தது. 2020 செப்ரெம்பர் 24ஆம் திகதி மேற்கொள்ளப் பட்ட அமைச்சரவை பத்திரத் துக்கமையவே இத்திட்டம் இரத்து செய்யப்பட்டது.

இந்நிலையில், சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாடு எட்டப்பட்ட தன் பின்னர், இந்தத் திட் டத்தை மீண்டும் ஆரம்பிப்ப தற்கு ஜப்பான் இணங்கியுள்ள தாக முன்னர் தெரிவிக்கப்பட் டது. எவ்வாறிருப்பினும், ஜப் பான் தூதுவர் அதற்கு மாறு பட்ட கருத்தைத் தெரிவித் துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஆங்கில மொழி செயல்திட்டம் பொஸ்கோ வித்தியில் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், மார்ச் 31

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பாடசாலைகளிலும் ஆங்கில மொழி மூலமான தொடர்பாடல் திறனை அதிக ரிக்கும் முகமாக செயல் திட் டம் ஒன்று அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

இந்த செயல்திட்டமானது நாடளாவிய ரீதியில் அனைத்து பாடசாலைகளிலும் முன்னெ டுக்கப்பட வுள்ளதுடன், இதன் முதல் கட்டமாக யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தி யாலயத்தில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் மூலம் பாடசாலை களில் ஆங்கில மொழியை மேம்படுத்தும் நோக்கில் ஒவ் வொரு நாளும் பத்து நிமிடங் கள் ஆங்கில மொழியை செவி மடுத்தல் மற்றும் உரையாடல் மூலம் ஆங்கில மொழி அறிவை மேம்படுத்தும் நோக்கத்தில் குறித்த செயல் திட்டம் முன் னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புறா வளர்ப்பால் ஏற்பட்ட தகராறில் ஒருவர் கொலை!

கிளிநொச்சி, மார்ச் 31

புறா வளர்ப்பு தொடர்பில் எழுந்த முரண்பாட்டாலேயே இளம் குடும்பஸ்தர் வாகனத் தால் மோதப்பட்டு கொல்லப் பட்டார் என்று பொலிஸாரின் விசாரணைகளில் தெரிய வந் துள்ளது.

ஏ-9 வீதியில் கிளிநொச்சி - பளை - இந்திராபுரத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை நடந்து சென்ற ஒருவர் பின்னால் வந்த வாகனம் மோதியதில் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த உதயபாஸ் கரன் நிருபராஜ் (வயது -28) என்ற ஒரு பிள்ளையின் தந் தையை கொல்லப்பட்டார்.

கொல்லப்படும் முன்னர் குறித்த நபர் உறவினரின் வீட்டில் மது அருந்திவிட்டு தகராறில் ஈடுபட்டார் என்றும், அவர் நடத்திய வாள்வெட்டில் இருவர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்தே அவர் வாகனத்தால் மோதப்பட்டு கொல்லப்பட்டார் என்றும் அறிய வருகின்றது.

இது தொடர்பில் பளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கை ஜப்பானியர்களின் நம்பிக்கையை இழந்துவிட்டது

## ஜப்பான் தூதுவர் தெரிவிப்பு



**கொழும்பு, மார்ச் 31**

**இலங்கை அரசாங்கத்தின் திடீர் மற்றும் தன்னிச்சையான கொள்கைகளால் ஜப்பானிய வர்த்தகர்கள் தற்போது இலங்கையில் வர்த்தகம் செய்வதற்கான நம்பிக்கையை இழந்து விட்டனர்.**

**- இவ்வாறு தெரிவித்துள்ளார் அந்த நாட்டின் இலங்கைக்கான தூதுவர் மிசுகோசி ஹிடியாகி.**

கொழும்பில் இலங்கை வாகன வர்த்தகர்கள் சம்மேளனத்தின் நிகழ்வில் கேள்விகளுக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையே 1952ஆம் ஆண்டுமுதல் பல தசாப்தங்களாக இராஜதந்திர வர்த்தக உறவுகள் காணப்படுகின்றது. இருந்த போதிலும் இலங்கை அரசாங்கத்தின் திடீர் மற்றும் தன்னிச்சையான கொள்கைகளால் ஜப்பானிய வர்த்தகர்கள் தற்போது இலங்கையில் வர்த்தகம் செய்வது குறித்த நம்பிக்கையை இழந்துள்ளனர்.

கடந்த காலங்களில் பொருளாதார, ஆட்சி முறை மற்றும் வெளிப்படைதன்மை தொடர்பில் அடிக்கடி கொள்கை மாற்றங்கள் இடம்பெற்றன. இதன் காரணமாக ஜப்பானிய வர்த்தகர்கள் இலங்கை குறித்த நம்பிக்கையை இழந்துவிட்டனர்.

மேலும், ஊழலை இல்லாமல் செய்வதற்கான கொள்கைகள், வருமான இடைவெளியை குறைத்தல் குறித்து கருத்து தெரிவித்துள்ள ஜப்பான் தூதுவர் அரச நிறுவனங்களின் வினைத்திறனை அதிகரிப்பது குறித்தும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

# 12 வயது சிறுமி வன்புணர்வு 39 வயது ஆசிரியர் கைது!

கொழும்பு, மார்ச் 31

12 வயதான சிறுமியை பாலியல் வன்புணர்வு செய்ததாகக் கூறப்படும் ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

பாடசாலை செல்வதற்காக சிறுமி பேருந்து தரிப்பிடத்தில் காத்திருந்துள்ளார். அச்சமயம் காரில் வந்த அந்தப் பாடசாலையை சேர்ந்த ஆசிரியர் சிறுமியை பாடசாலையில் இறக்கி விடுவதாகக் கூறி காரில் அழைத்துச் சென்று சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார்.

தான் ஆசிரியரால் பலாத்காரம் செய்யப்பட்டமையை சிறுமி பொலிஸாரிடமோ அல்லது அவரின் தாயாரிடமோ கூறவில்லை. ஆசிரியருடன் ஏற்பட்ட காதல் உறவே இதற்குக் காரணம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

மகள் வீட்டுக்கு வரத் தாமதமானதால் தாயார் பாடசாலைக்கு சென்றுள்ளார். அங்கு மகள் இல்லாததால் அதிபருக்கு அவர் தகவல் தெரிவித்துள்ளார் இதையடுத்து பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நிலையில் பொலிஸார் நடத்திய விசாரணையிலேயே இந்த விடயம் வெளிவந்தது.

இதையடுத்து, 39 வயதான ஆசிரியரை பொலிஸார் கைது செய்துள்ளனர். தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ஐ)

# போலி இணையம் மூலமாக வீசா வழங்கிய நபர் கைது!

கொழும்பு, மார்ச் 31

போலி இணையத்தளத்தை உருவாக்கி வீசா வழங்கிய சந்தேக நபரை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கொழும்பில் உள்ள இந்திய வீசா நிறுவனத்தின் கிளையொன்று கண்டி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கோபல்லவ மாவத்தை பகுதியில் அமைந்துள்ளது.

இந்த நிலையில், குறித்த சந்தேக நபரால் அந்த நிறுவனத்தின் தகவல்களுடன் இணையத்தளம் ஒன்று உருவாக்கப்பட்டு மோசடியான முறையில் அதிக பணம் பெறப்பட்டு வீசா வழங்கப்பட்டு வந்துள்ளது.

கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய, கடந்த 28 ஆம் திகதி மாலை, வத்தேகம பிரதேசத்தில் மடிக்கணினி மற்றும் கைபேசியுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பன்வில பிரதேசத்தை சேர்ந்த 29 வயதுடையவர். ஆள்மாறாட்டம், மோசடி, அறிவுசார் சொத்துரிமைச் சட்டத்தின் கீழான குற்றங்கள் மற்றும் கணினி குற்றச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட குற்றங்களுக்காக சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு பிரதான நீதவான் முன்னிலையில் நேற்றுமுன்தினம் சந்தேக நபர் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் ஏப்ரல் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஐ)

# திறைசேரி செயலருக்கு எதிரான வழக்கு ஒத்திவைக்கப்பட்டது!

கொழும்பு, மார்ச் 31

திறைசேரி செயலாளருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் ஆகியோர் தாக்கல் செய்த இரண்டு நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் நேற்று மே 22 ஆம் திகதிக்கு உச்ச நீதிமன்றத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக உச்ச நீதிமன்ற உத்தரவுக்கு இணங்கத் தவறிய குற்றச்சாட்டின் பேரில் திறைசேரி செயலாளர் மகிந்த சிறிவர்த்தனவுக்கு எதிராக இந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த இரண்டு விண்ணப்பங்களும் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு வந்த போது, சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் விண்ணப்பங்கள் தொடர்பான பல ஆவணங்களை தாக்கல் செய்வதற்கு மேலும் கால அவகாசம் கோரினார்.

அரசமைப்பின் 105(3) பிரிவின் கீழ் நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன மீது குற்றம் சுமத்த உத்தரவிடுமாறு ஐக்கிய மக்கள் சக்தி பொதுச் செயலாளரும் மக்கள் விடுதலை முன்னணி பாராளுமன்ற உறுப்பினரும் கோரியுள்ளனர்.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய மற்றும் நீதியரசர் புவனேக அலுவிஹாரே, நீதியரசர் பிரியந்த ஜயவர்தன, நீதியரசர் விஜித் மலல்கொட மற்றும் நீதியரசர் முர்து பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய ஐவரடங்கிய நீதியரசர்கள் குழாம் உச்ச நீதிமன்றத்தின் அமர்வில் பங்கேற்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தி பொதுச் செயலாளருக்காக உபுல் ஜயசூரிய பி.சி.யுடன் ஜெப்ரி அழகரத்தினம் முன்னிலையானார். விஜித ஹேரத் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி உபுல் குமாரப்பெரும முன்னிலையானார்.

திறைசேரி செயலாளர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி எராஜ் டி சில்வா மற்றும் ஹபீல் பாரிஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)

# பேருவளையில் நேற்று 3.7 ரிச்டர் நிலநடுக்கம்!

கொழும்பு, மார்ச் 31

களுத்துறையின் - பேருவளையில் நேற்று வியாழக்கிழமை சிறியளவான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இதேநேரம், நேற்று மதியம் 1.02 மணியளவில் பேருவளை கடற்கரையிலிருந்து 37 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கடற்பகுதியில் 3.7 ரிச்டர் அளவில் சிறியளவான நிலநடுக்கம் பதிவானதாக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் உறுதிப்படுத்தியது.

களுத்துறை, பேருவளை மற்றும் பாணந்துறை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் நிலநடுக்கத்தை உணர்ந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும், இந்த நிலநடுக்கத்தால் எந்தப் பாதிப்புகளும் ஏற்படவில்லை என்றும் இந்த சிறிய நில நடுக்கங்களால் பாதிப்புகளை ஏற்படுத்த முடியாது. இதனால், மக்கள் அச்சப்பட வேண்டாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# இராணுவ கட்டுப்பாட்டிலிருந்த கோயிலின் சிலைகள் மாயம்!

யாழ்ப்பாணம், மார்ச் 31

பலாலியில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த பழமை வாய்ந்த இராஜ ராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தின் விக்கிரகங்கள் களவாடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் பலாலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அத்துடன், தெல்லிப்பழை பிரதேச செயலகத்திலும் விக்கிரகங்கள் காணாமல் போயுள்ளமை சம்பந்தமாக முறைப்பாடு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த அம்மன் ஆலயம் 1846 ஆம் ஆண்டு அம்மன் அமைக்கப்பட்டு, அங்கே ஒவ்வொரு கடவுளர்களின் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

1990 ஜூன் 15 ஆம் தேதி எமது கிராமத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக எமது கிராம மக்கள் இடம்பெயர்ந்து பல இடங்களில் தற்காலிகமாக குடியேறினர்.

2002 ஆம் ஆண்டு இந்து கலாசார அமைச்சராக இருந்த மகேஸ்வரனாலும் எமது கிராம மக்களின் முயற்சியாலும் இந்த ஆலயத்துக்கு சென்று வரக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டது. 2002ஆம் ஆண்டிலிருந்து 2006 ஆம் ஆண்டு மே மாதம் மட்டும் இந்த ஆலயத்துக்கு சென்று வந்த போதும் நல்ல நிலையிலே ஆலயம் இருந்தது.

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் திகதி மீண்டும் இந்த ஆலயத்துக்கு சென்ற போது விக்கிரகங்கள் எல்லாம் நல்ல நிலையிலே இருந்தன.

தற்போது வரை இந்த ஆலயத்துக்கு விசேட தினங்களுக்கு சென்று வந்து கொண்டிருக்கின்றோம். இந்த நிலையில், 2022 டிசெம்பர் 28ஆம் திகதி திருவெம்பாவை தினத்துக்கு ஆலயத்துக்கு சென்றபோது முருகன் சிலை காணாமல் போயிருந்தது.

இப்போது மற்றொரு முருகன் சிலையும் காணாமல் போயுள்ளது. இந்த ஆலயத்துக்கு இராணுவத்தின் அனுமதி பெற்று - பதிவுகளை செய்த பின்னரை ஆலயத்துக்கு சென்று வர முடியும் இப்படி இருக்கையில் ஆலயத்தின் இரு விக்கிரகங்களும் எவ்வாறு களவு போயின. இதன் பின்னணியில் இராணுவத்தினரே இருக்க வேண்டும் என்று ஆலயத்தின் பரிபாலன சபை செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (ஐ)

# சப்ரகமுவ பல்கலையின் நான்கு மாணவர்கள் கைது

கொழும்பு, மார்ச் 31

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் புதிதாக இணைக்கப்பட்ட மாணவர்கள் சிலரை அடித்து துன்புறுத்திய குற்றச்சாட்டில் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட மாணவர்கள் நால்வர் இரகசிய பொலிஸ் பிரிவினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த பெப்ரவரி 15 ஆம் திகதி சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் விடுதிக்குள் அத்துமீறி உள்நுழைந்து புதிய மாணவர்களை அடித்து காயப்படுத்திய குற்றச்சாட்டில் இந்த மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மாணவர்கள் மொறட்டுவை, வெலிமடை, அம்பலாங்கொட பிரதேசங்களைச் சேர்ந்த 25, 23 மற்றும் 24 வயதானவர்களாவர்.

ஈழநாடு



# ‘அதிமுக வாக்குகள் சிதறிக் கிடக்கின்றன’ எடப்பாடி முன்பு காத்திருக்கும் சவால்கள்!

**விஷ்ணுபிரகாஷ் நல்லதம்பி**



கடந்த ஆண்டு ஜூலை 11-ஆம் திகதி கூடிய அதிமுக பொதுக்கு ழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங் களை எதிர்த்து ஓ.பன்னீர்செல்வம் தரப்பு தொடர்ந்த வழக்கை சென்னை உயர்நீதி மன்ற தள்ளுபடி செய்தது.

இதையடுத்து, அதிமுக பொதுச் செய லாளருக்கான தேர்தல் முடிவுகளை வெளி யிட நீதிமன்றம் பிறப்பித்து இருந்த உத்த ரவு நீங்கியதையடுத்து, பொதுச் செயலா ளர் தேர்தலுக்கான அதிகாரிகளாக நிய மிக்கப்பட்டிருந்த பொள்ளாச்சி ஜெய ராமன், நத்தம் விஸ்வநாதன் ஆகியோர் தேர்தல் முடிவுகளை அறிவித்தனர்.

அதிமுக பொதுச் செயலாளர் பதவிக்கு எடப்பாடி பழனிசாமி மட்டுமே மனுத் தாக்கல் செய்திருந்த நிலையில், அதிமுக வின் 8வது பொதுச் செயலாளராக எடப் பாடி பழனிசாமி போட்டியின்றி தேர்வா னார்.

எம்.ஜி.ஆர், ஜெயலலிதா வழியில் எடப்பாடி பழனிசாமி அதிமுகவை வழி நடத்தி நீடிக்க முடியுமா என்ற கேள்வி அதிமுகவின் ஒன்றரை கோடி தொண்டர் கள் மத்தியில் எழுந்துள்ளது.

**அதிமுகவின் பொதுச் செயலாளர்கள்**

*1972ஆம் ஆண்டு உருவான அதிமுக வுக்கு இந்நாள் வரை 8 பேர் பொதுச் செயலாளர்களாக இருந்துள்ளனர்.*

*1974 - அதிமுகவை தொடங்கிய எம். ஜி.ஆர். அந்த கட்சியின் பொதுச் செயலா ளர் ஆனார்*

*1978 - நாவலர் நெடுஞ்செழியன் பொதுச் செயலாளராக தேர்வு செய்யப் பட்டார்*

*1980 - ப.உ. சண்முகம் அக்கட்சியின் பொதுச் செயலாளராக தேர்வு செய்யப் பட்டார்.*

*1984 - ராகவானந்தம் பொதுச் செயலா ளர் ஆனார்.*

*1986 - எம்.ஜி.ஆர் மீண்டும் பொதுச் செயலாளர் ஆனார்*

*1989 - எம்.ஜி. ஆர். மறைவுக்கு பிறகு அதிமுக இரண்டாக பிளவுப்பட்டு, மீண் டும் ஜெயலலிதா தலைமையில் ஒரே அணி யாக சேர்ந்த பிறகு, அதிமுகவின் பொதுச் செயலாளராக ஜெயலலிதா தேர்வு செய் யப்பட்டார். அப்போது முதல் 2016ஆம் ஆண்டு வரை அதிமுகவின் பொதுச் செய லாளராக ஜெயலலிதா நீடித்தார்.*

*2016 - சசிகலா, அதிமுகவின் இடைக் கால பொதுச் செயலாளர் ஆனார்.*

*ஜூலை 11, 2022 - அதிமுகவின் இடைக்கால பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமியை பொதுக்குழு தேர்வு செய்தது. நீதிமன்ற உத்தரவுக்கு பிறகு, அக்கட்சியின் 8வது பொதுச் செய லாளராக போட்டியின்றி எடப்பாடி பழனி சாமி தேர்வு செய்யப்பட்டார்.*

**எம்.ஜி.ஆர், ஜெயலலிதா வழியில்..**

அதிமுக முகங்களாக அறியப்படும் எம்.ஜி.ஆர், ஜெயலலிதாவுக்கு பிறகு எடப்பாடி பழனிசாமி அக்கட்சியின் பொது செயலாளராக தேர்வு செய்யப் பட்டிருக்கும் நிலையில், கட்சியை எந்தப் பாதையில் செலுத்த போகிறார் என்ற கேள்விக்கு பதிலளித்த எச்.வி. ஹண்டே, திமுகவை எதிர்ப்பது மட்டுமே அதிமுக வின் தலைவருக்கு நோக்கமாக இருக்க வேண்டும் என்று கூறினார்.

எம்.ஜி.ஆர். அதிமுகவை தொடங்கிய போதும், அவரின் மறைவுக்கு பிறகு ஜெய லலிதா அதிமுகவின் பொதுச் செயலாளர்



ஆன போதும் அதிமுகவில் ஒர் அசாதா ரண சூழல் நிலவியது.

அதே போன்ற சூழலில் தான் ஓ.பி.எஸ், சசிகலா, டிடிவி தினகரன் என பலரையும் தாண்டி எடப்பாடி பழனிசாமி பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டு இருக்கிறார்.

அவர் இப்போது அதிமுகவுக்கு தலை வராகி இருக்கிறார். ஆனால் மக்கள் அவ ரைத் தலைவராக ஏற்றுக் கொள்ள வேண் டும் என்றால் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா வழியில் தேர்தலில் வெற்றி பெற வேண் டும் என்று மூத்த பத்திரிகையாளர் தராசு ஷியாம் கூறினார்.

தமிழ்நாட்டில் 2016ஆம் ஆண்டுக்கு பிறகு நடந்த சட்டமன்ற தேர்தல், நாடா ளுமன்ற தேர்தல், இடைத் தேர்தல்கள், ஊரக உள்ளாட்சி தேர்தல், நகர்ப்புற உள் ளாட்சி தேர்தல் என கடந்த 8 தேர்தலில் அதிமுக தோல்வி அடைந்து இருக்கிறது. அதனால் ஒற்றைத் தலைமை என்ற தனது வாதத்தை நிரூபிக்க எடப்பாடி பழனிசா மிக்கு தேர்தல் வெற்றி அவசியம் என்று மூத்த பத்திரிகையாளர் பன்னீர்செல்வன் தெரிவித்தார்.

1973ஆம் ஆண்டு நடந்த திண்டுக்கல் நாடாளுமன்ற இடைத்தேர்தலில் திமுக, காங்கிரஸை எதிர்த்து முதல் முறையாக களம் கண்ட அதிமுக, சுமார் இரண்டரை லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அந்த வெற்றியின் மூலம் மக்கள் மத்தி யில் அரசியல் தலைவராக எம்.ஜி.ஆர். உருவெடுத்தார். அதன் தொடர்ச்சியாக அதிமுக என்ற கட்சி தமிழ்நாட்டில் எழுச்சி கண்டது. சட்டமன்ற தேர்தலில் களம் கண்டு 3 முறை தமிழ்நாட்டின் முத லமைச்சராக எம்.ஜி.ஆர்.இருந்தார். அது போல ஒரு வெற்றியை எடப்பாடி பழனி சாமி வரும் 2024 நாடாளுமன்ற தேர்தலில் பெற வேண்டும் என்று ஷியாம் குறிப்பிட் டார்.

எம்.ஜி.ஆரை போலவே, ஜெயலலிதா வும் ‘மக்கள் தலைவராக’ மாறியது ஒரு தேர்தல் வெற்றியின் மூலம்தான் எனக் குறிப்பிட்ட அதிமுகவின் முன்னாள் அமைச்சர் எச்.வி. ஹண்டே 1989ஆம் ஆண்டு நடந்த இடைத்தேர்தல் குறித்து விவரித்தார்.

எம்.ஜி.ஆரின் மறைவுக்கு பிறகு, அதி முக(ஜெ) அணி, அதிமுக(ஜா) அணி என பிரிந்து 1989ஆம் சட்டமன்ற தேர்தலில் திமுகவிடம் தோல்வி அடைந்திருந்தது.

தேர்தல் ஆணையத்தால் இரட்டை இலை சின்னம் முடக்கப்பட்ட நிலையில், பல்வேறு சிக்கல்களுக்கு பிறகு இரண்டு அணியும் சேர்ந்து 1989ஆம் ஆண்டு நடந்த இரண்டு தொகுதிகளுக்கான இடைத் தேர்தலை சந்திக்க முடிவு செய் தது.

ஜெயலலிதா அணிக்கு மதுரை கிழக்கு தொகுதியும், ஜானகி அணிக்கு திருச்சி மாவட்டத்திலுள்ள மருந்தாபுரி தொகுதி யும் என உடன்படிக்கை ஏற்பட்டு நடந்த அந்த இடைத்தேர்தலில் இரண்டு தொகுதி களிலும் அதிமுக வெற்றி பெற்றது.

இதன்மூலம் சட்டமன்றத்தில் அதிமு கவின் செல்வாக்கு 27இல் இருந்து 29 ஆக உயர்ந்தது. அதன்பிறகு ஜானகி அரசிய லில் இருந்து ஓய்வு பெறவே, அந்த தேர் தல் வெற்றியின் மூலம் நம்பிக்கையை பெற்று இருந்த ஜெயலலிதா, அதிமுகவின் பொதுச் செயலாளராக தேர்வு செய்யப் பட்டார். அந்த இடைத் தேர்தல் வெற் றியை தொடர்ந்து அவரை மக்கள் தலை வராக ஏற்றுக் கொண்டனர் என்று ஹண்டே தெரிவித்தார்.

**எடப்பாடி பழனிசாமிக்கு காத்திருக்கும் சவால்கள்**

அதிமுகவின் பொதுச் செயலாளராக பொறுப்பேற்று இருக்கும் எடப்பாடி பழ னிசாமி, புதிய உறுப்பினர் சேர்ப்பு நடவ டிக்கைக்கு உத்தரவிட்டு அறிக்கை வெளி யிட்டுள்ளார்.

கட்சியின் அமைப்பு ரீதியிலான நடவ டிக்கையில் கவனம் செலுத்தத் தொடங்கி இருக்கும் எடப்பாடி பழனிசாமி, தொண் டர்கள் இடையே ஒரு உத்வேகத்தையும் உணர்ச்சி பூர்வமான எழுச்சியையும் ஏற்ப டுத்த வேண்டும். தலைமை என்பது வெறும் தலைப்பு அல்ல என்று ஷியாம் கூறினார்.

ஜெயலலிதா மறைவுக்கு பிறகு எடப் பாடி பழனிச்சாமி அணி, ஓ.பன்னீர்செல் வம் அணி, சசிகலா அணி, டிடிவி.தினக ரன் அணி என கட்சியின் வாக்குகள் பல முனைகளாக சிதறிக் கிடக்கின்றன. அதி முக இழந்த வாக்குகளை மீண்டும் சேர்க்க வேண்டிய கட்டாயம் எடப்பாடி பழனி சாமிக்கு இருக்கிறது, என ஹண்டே கூறி னார்.

“அதிமுக இப்போது ஒரு குறிப்பிட்ட இனத்தவருக்கான கட்சியாக தெரிகிறது, அதை மாற்றும் வகையில் தமிழ்நாடு முழு வதும் உள்ள கட்சித் தொண்டர்கள் ஏற் றுக்கொள்ளும் தலைவராக எடப்பாடி பழனிசாமி மாற வேண்டும்” என்று பெய ரைக் குறிப்பிட விரும்பாத தென்மாவட் டத்தைச் சேர்ந்த அதிமுக நிர்வாகி கூறி னார்.

பல பிரிவுகளாக அதிமுக செயல்பட்டு வந்த நிலையில், இழந்த வாக்கு வங்கிகளை மீண்டும் உருவாக்கி நாடாளுமன்ற தேர் தலை எதிர்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார்.

பாஜக, பாமக உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளுடன் நட்புறவை எடப்பாடி பழ னிசாமி வளர்க்க வேண்டும் எனக் கூறும் பத்திரிகையாளர் ஷியாம், திமுக கூட்ட ணியில் உள்ள கட்சிகள் ஒரே அணியில் பல தேர்தல்களை எதிர்கொண்டு வெற்றி பெறும் நிலையில், 2024ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற திமுகவுக்கு எதிராக வலுவான கூட்டணியை எடப்பாடி பழனிசாமி அமைக்க வேண் டும் என்றார்.

“அடுத்த ஆண்டு நடக்கவுள்ள நாடா ளுமன்ற தேர்தலில் எடப்பாடி பழனிசாமி வெற்றி பெற்றால் மட்டுமே, அதிமுகவில் எம்.ஜி.ஆர், ஜெயலலிதாவை போன்ற ஆளுமையாக அவர் நீடிக்க முடியும். ஆனால் என்னை பொறுத்தவரை 2024 தேர்தலில் அவருக்கு வெற்றி சாத்திய மில்லை” என பத்திரிகையாளர் ஷியாம் தெரிவித்தார். (பிபிசி)



ஈழநாடு



# இலங்கையின் தொல்லியல் சிறப்புமிக்க ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் உடைப்பு

# அரசாங்கம் என்ன சொல்கிறது?

ரஞ்சன் அருண் பிரசாத்

இலங்கையின் பிரசித்தி பெற்ற கீரிமலை பகுதியிலுள்ள சிவன் ஆலயமொன்று உடைக்கப்பட்டு, அந்த பகுதியில் ஜனாதிபதி மாளிகை கட்டப்பட்ட சம்பவம் அண்மை காலத்தில் பதிவான பின்னணியில், தற்போது வவுனியா பகுதியிலுள்ள வரலாற்று சிறப்புமிக்க சிவன் ஆலயம் முழுமையாக இடித்தழிக்கப்பட்டுள்ளதாக குற்றஞ்சுமத்தப்படுகின்றது.

வவுனியா - நெடுங்கேணி பகுதியை அண்மித்துள்ள வெடுக்குநாறி மலை பகுதியிலுள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயமே இவ்வாறு இடித்தழிக்கப்பட்டுள்ளதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

வெடுக்குநாறி மலையிலுள்ள ஆதிலிங் கேஸ்வரர் ஆலயத்திற்கு செல்ல கடந்த மூன்று வருட காலமாக தடைவிதிக்கப் பட்டிருந்ததாகவும் அவர் கூறுகின்றார்.

அத்துடன், ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் திருவிழாக்களை நடத்தவும் தடைவிதிக்கப்பட்டிருந்ததாக அவர் குறிப்பிடுகின்றார்.

‘மூன்று தினங்களுக்கு முன்பு வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இருக்கின்ற அனைத்து விக்கிரகங்களும் உடைத்தெறியப்பட்டுள்ளது. என்னை







பொருத்தவரை படைத் தரப்பு இந்த செயலை செய்திருக்க வேண்டும். ஏனென்றால், தொல்பொருள் திணைக்களத்தின் உதவியுடன், வெடுக்குநாறி மலையை பௌத்த மயமாக்கி, அதனை விகாரையாக்குவதற்காக தான் தொடர்ச்சியாக இரண்டு வருடங்கள் முயற்சி செய்து வருகின்றார்கள். இது வன்மையாக கண்டிக்கத்தக்க விடயம்” என நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவிக்கின்றார்.

வவுனியா வடக்கு பகுதியின் நெடுங்கேணி பிரதேசத்தில் இந்த வெடுக்குநாறி மலை அமைந்துள்ளது.

இந்த வெடுக்குநாறி மலையில் சுமார் 15 அடியை விடவும் உயரமான சிவலிங்கமொன்று காணப்படுவதாக ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் போசகர் வைரமுத்து பூபாலசிங்கம் தெரிவித்தார்.

இந்த சிவலிங்கம் சுயம்பு லிங்கமாகவே கருதப்படுவதாகவும் அவர் கூறுகின்றார். மலை உச்சியில் பல நூற்றாண்டு காலத்திற்கு முன்பிலிருந்து இந்த லிங்கம் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

‘2018ம் ஆண்டு தான் தொல்லியல் திணைக்களத்திற்கு தெரியும், தொல்லியலுடன் சம்பந்தப்பட்ட மலை என்று அதற்கு முன்னர் அவர்களுக்கு தெரியாது. அது தொல்லியலுக்கு வர்த்தமானி மூலம் அறிவிக்காத இடம். 2018ம் ஆண்டு அந்த மலையில் பூஜை செய்வதற்கு, வழிபாடு செய்வதற்கு எங்களுக்கு அனுமதி தந்தார்கள். 2019ம் ஆண்டு அந்த இடத்திற்கு செல்லக்கூடாது, பூஜை செய்யக்கூடாது என உத்தரவிட்டார்கள்.

தொல்லியலுடன் சம்பந்தப்பட்ட மலை, நீங்கள் போகக்கூடாது என சொல்லி எங்களை தடுத்தார்கள். பல நூற்றாண்டு காலத்திற்கு முன்னர் காணப்பட்ட சுயம்பு லிங்கம். அந்த காலத்தில் இருந்த அரசர்களாலயோ, யாரோலோ வணங்கப்பட்டது. அதில் கல்வெட்டுக்கள் எல்லாம் இருக்கின்றது. 30 வருட காலத்தில் அது அழிவடைந்திருந்தது. பின்னர் 2016ம் ஆண்டு நாங்கள் திரும்ப இந்த விக்கிரகங்களை கொண்டு வந்து வழிபட்டோம்.

சுயம்பு லிங்கத்தை யாராலும் எதுவும் செய்ய முடியாது. கற்களினால் செதுக்கப்பட்ட நாகதம்பிரான் சிலையொன்றும் இருக்கின்றது. அதையும் யாராலும் எதுவும் செய்ய முடியாது. நாக வடிவில் அந்த கல் செதுக்கி காணப்படுகின்றது. அந்த கல்லுக்கு கீழ், இன்றும் நாகங்கள் இருக்கின்றன.” என ஆலயத்தின் போசகர் வைரமுத்து பூபாலசிங்கம் குறிப்பிடுகின்றார்.

### “ஆலயம் சிதைவடைந்திருந்ததை 26ம் தேதியே கண்டோம்”

இந்த ஆலயத்திற்கு கடந்த காலங்களில் செல்ல அனுமதி மறுக்கப்பட்ட நிலையில், கடந்த 26ம் தேதியே ஆலயம் உடைக்கப்பட்டுள்ளதை அவதானித்ததாக ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் போசகர் வைரமுத்து பூபாலசிங்கம் தெரிவிக்கின்றார்.

‘நாங்கள் அமைத்த பீடங்கள் மாத்திரமே இருக்கின்றன. விக்கிரகங்கள் ஒன்றும் இல்லை. சுயம்பு லிங்கம் இருக்கின்றது. சுயம்பு லிங்கத்தை யாராலும் அழிக்க முடியாது. நாகதம்பிரான் விக்கிரமும் இருக்கின்றது. மற்ற அனைத்து விக்கிரகங்களும் அழிக்கப்பட்டுள்ளன.” என அவர் கூறுகின்றார்.

“
வெடுக்குநாறி மலை பகுதியில் சேதமாக்கப்பட்டுள்ள விக்கிரகங்களை மீள் பிரதிஷ்டை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறிய அமைச்சர் ஜீவன் தொண்டமான், எதிர்வரும் ஞாயிற்றுகிழமை மீள் பிரதிஷ்டை பூஜைகள் இடம்பெறும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

### யார் மீது சந்தேகம்? - ஆலய நிர்வாகத்தின் பதில்

இந்த சம்பவம் தொடர்பில் யார் மீது சந்தேகம் எழுந்துள்ளது என ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் போசகர் வைரமுத்து பூபாலசிங்கத்திடம் வினவியபோது,

ஆலயம் அழிக்கப்பட்டதை தாம் நேரில் காணாமையினால், எவர் மீதும் தம்மால் சந்தேகம் கொள்ள முடியாது என அவர் பதிலளித்தார்.

எனினும், தமது ஆலயம் அழிக்கப்பட்டமைக்கான பொறுப்பை, தொல்பொருள் திணைக்களம் மற்றும் போலீஸார் ஏற்றுக்கொள்ள வேண்டும் என அவர் கூறுகின்றார்.

ஏனெனில், அலயத்திற்கு தம்மை செல்ல வேண்டாம் என குறித்த இரண்டு தரப்பினருமே தடுத்து நிறுத்தியதாகவும், அதனால் அவர்களே இதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

### அரசாங்கத்தின் பதில்

வவுனியா - வெடுக்குநாறி ஆலயம் உடைக்கப்பட்டுள்ள சம்பவத்திற்கும், தமக்கும் இடையில் எந்தவித தொடர்பும் கிடையாது என புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் உடனடி விசாரணைகளை ஆரம்பிக்குமாறு, தான் தொல்பொருள் திணைக்களத்திற்கும், நெடுங்கேணி போலீஸாருக்கும் உத்தரவு பிறப்பித்துள்ளதாக அவர் கூறுகின்றார்.

ஆலயம் அரசாங்கத்தினால் உடைக்கப்பட்டுள்ளதாக வெளியாகும் குற்றச்சாட்டு தொடர்பில் வினவிய போது, அமைச்சர் விதுர விக்ரமநாயக்க அதற்கும் பதிலளித்தார்.

“ஆலயத்துடன் தொடர்புடையவர்கள் இதனை செய்திருக்க மாட்டார்கள். எனினும், ஆலயத்துடன் தொடர்புப்படாது வெளிநபர்களே இதனை செய்திருக்க வேண்டும் என நினைக்கின்றேன். சில பிரச்னைகளை உருவாக்க வெளிநபர்கள் இதனை செய்திருக்கக்கூடும். தொல்பொருள் திணைக்களத்திற்கு அதனை செய்ய வேண்டும் என்றால், பல இடங்களை அவ்வாறு செய்ய முடியும்.

எனினும், நாம் அவ்வாறு செய்ய மாட்டோம். ஆய்வுகளை செய்து, அதில் ஏதேனும் உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில், அதன் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என கலந்துரையாடியுள்ளோம். உண்மைகளை உறுதிப்படுத்த வேண்டும். ஆய்வுகளை நடத்தாது, எதையும் கூற முடியாது. “ என விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் விதுர விக்ரமநாயக்க கூறினார்.

ஜனாதிபதி வழங்கிய உறுதிமொழி வெடுக்குநாறி ஆலயம் உடைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனக்கு உறுதி வழங்கியதாக இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவிக்கின்றார்.

இதேவேளை, வவுனியா - வெடுக்குநாறி ஆலயம் உடைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் உடனடி விசாரணைகளை ஆரம்பிக்குமாறு, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, போலீஸ் மாஅதிபருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளதாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிக்கின்றார்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்தி, சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறும் ஜனாதிபதி, போலீஸ் மாஅதிபருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளதாக அவர் கூறுகின்றார்.

தானும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இணைந்து இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்ததாக கூறிய ஜீவன் தொண்டமான், தானும் போலீஸ் மாஅதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வெடுக்குநாறி மலை பகுதியில் சேதமாக்கப்பட்டுள்ள விக்கிரகங்களை மீள் பிரதிஷ்டை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறிய அமைச்சர் ஜீவன் தொண்டமான், எதிர்வரும் ஞாயிற்றுகிழமை மீள் பிரதிஷ்டை பூஜைகள் இடம்பெறும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (பிபிசி)

# காங்கேசன்துறை - காரைக்கால் படகு சேவை கிழக்குக்கு நேரடி போக்குவரத்து வசதி செய்க!

நிந்தவூர், மார்ச் 31

இந்தியாவின் புதுச்சேரியிலுள்ள காரைக்கால் துறைமுகத்துக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் ஆரம்பிக்கப்படவிருக்கும் பயணிகள் படகுச் சேவையின் பயனை கிழக்கு வாழ் மக்களும் அனுபவிக்கும் வண்ணம் கிழக்கிலிருந்து, காங்கேசன் துறைக்கு நேரடி இணைப்பு போக்குவரத்து சேவைகளை ஆரம்பிக்க ஆவன செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும், சமூக செயல்பாட்டாளருமான ஐ.எல்.எம்.மாஹிர், துறைமுகங்கள் கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கு அனுப்பி வைத் துள்ள கடிதம் ஒன்றில் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியுள்ளார்.

இந்த படகுச் சேவை மூலம் கிழக்கிலுள்ள வர்த்தகர்களும் இலகுவாகத் தமது இந்தியாவுடனான வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுக்கவும், மற்றும் உல்லாசப் பயணத்துறை அபிவிருத்தி, திருத்தல யாத்திரை களுக்கான இலகு வசதி போன்ற வாய்ப்புக்கள் கிடைக்கவுள்ளன.

இந்தப் பயன்கள் கிழக்கு மக்களுக்கும் கிடைப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டுமெனத் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள தவிசாளர் மாஹிர்,

குறித்த படகுச் சேவைகள் இடம்பெறவிருக்கும் தினங்களை மையப்படுத்தி மட்டக்களப்பிலிருந்து காங்கேசன் துறைக்கான நேரடி இணைப்பு ரயில் சேவைகளை ஆரம்பிக்க ஆவன செய்யுமாறும்,

இதே அடிப்படையில் கிழக்கின் முக்கிய நகரங்களிலிருந்து குறிப்பிட்ட தினங்களில் காங்கேசன்துறைக்கான போக்குவரத்து பஸ் சேவைகளை ஆரம்பிக்க அமைச்சர் ஆவன செய்ய வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

இச்சேவைகளை ஆரம்பிப்பதன் மூலம் கிழக்கு மாகாண மக்களுக்கு குறித்த படகுச் சேவையின் பயனை அனபவிக்க முடியுமெனவும் முன்னாள் தவிசாளர் மாஹிர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தவிரவும், இந்தியாவின் புதுச்சேரியிலுள்ள காரைக்கால் துறைமுகத்திற்கும் காங்கேசன் துறை துறைமுகத்திற்கும் இடையிலான படகுச் சேவை எதிர் வரும் ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி முதல் ஆரம்பமாகுமென அமைச்சர் நிமல் சிறி பாலடி சில்வா தெரிவித்துள்ளார்.

இதன்படி காரைக்கால்துறைமுகத்திலிருந்து காங்கேசன் துறை, துறை முகத்திற்கு குறித்த தினத்தில் (ஏப்ரல் - 29) புதிய படகுச் சேவையின் முதல் படகு வருகை தருமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தப் படகுச் சேவையை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக காங்கேசன்துறை துறைமுகத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும், புதிய பயணிகள் முனையம் ஒன்றை நிர்மாணிப் பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அதற்காக துறைமுக அதிகார சபை 144 மில்லியன் ரூபாய் நிதியியைப் பெற்றுக் கொடுத்துள்ளதுடன், அதற்கான நிர்மாணப் பணிகள் இலங்கை கடற்படையினரால் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தப் படகுச் சேவையின் ஒரு வழிப்பயணத்துக்கு பயணி ஒருவரிடமிருந்து 50 டொலர்களை (சுமார் 16 ஆயிரம் ரூபா) அறவிடப்படுவதுடன்,

100 கிலோ கிராம் பொருட்களை பயணி ஒருவர் கொண்டுவர அனுமதிக்கப்படுவரெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு படகில் ஒரே தடவையில் 150 பயணிகள் ஏற்றிச் செல்லப்படுவரெனவும், காரைக்கால் துறைமுகத்திலிருந்து புறப்பட்டு நான்கு மணி நேரத்தில் படகு காங்கேசன்துறையை வந்தடையுமெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல் கட்ட நடவடிக்கைகளின் போது, பகல் நேரங்களில் மட்டுமே இந்த பயணிகள் படகுச் சேவை இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக் கது.

மேலும் இந்தப் பயணிகள் படகுச் சேவை ஆரம்பிக்கப்படவிருப்பது குறித்து தவிசாளர் மாஹிர் மகிழ்ச்சியும் வரவேற்பும் தெரிவித்துள்ளதுடன் அமைச்சருக்கு நன்றியும் தெரிவித்துள்ளார். (ஐ-06)

# முன்னாள் போராளிகள் ரி. ஐ. டியால் விசாரணை

## சிறீதரன் எம். பி. குற்றச்சாட்டு

கிளிநொச்சி, மார்ச் 31



கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னாள் போராளிகள், சமூக நல செயல்பாட்டாளர்கள் தொடர்ந்தும் பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப் படுகின்றனர் என்று பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தெரிவித்துள்ளார்.

விவேகானந்தநகர், கிளிநொச்சியைச் சேர்ந்த, புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளியான அமாவாசை மதிவண்ணன், இலங்கைத் தமிழரசு கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளைச் செயலாளரும், கனகபுரம் மாவீரர் பணிக்குழுவின் செயலாளருமான வீரவாகு விஜயகுமார், உருத்திரபுரம், கிளிநொச்சியைச் சேர்ந்த, கிளி/புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் அதிபர் தங்கவேலு கண்ணபிரான், இரத்தினபுரம், கிளிநொச்சியைச் சேர்ந்த புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளியான சிவப்பிரகாசம் ஜெயதீபன் ஆகியோரே அண்மைய நாட்களில் பரந்தனிலும், இரணைமடுவிலுமுள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவு பணிமனைகளுக்கு அழைக்கப்பட்டு பல மணிநேர விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பொருளாதாரத்தை நிமிர்த்த வேண்டியுள்ள நெருக் கடி நிலையிலும் தமிழர்கள் மீதான அடக்குமுறைகள் குறைந்தபாடில்லை - என்றும் கூறினார்.

# கட்சி அரசியல் முக்கியமில்லை!

## ஹர்ச டி சில்வா எம். பி.

கொழும்பு, மார்ச் 31

இந்த நேரத்தில் கட்சி அரசியல் முக்கியமில்லை, தேசத்தை கட்டியெழுப்ப சரியான சித்தாந்தத்தை கடைப்பிடிப்பதே இப்போது முக்கியம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும்“எங்களைப் பற்றிய ஊகங்களிலிருந்து ஒருவர் புரிந்து கொள்ளக்கூடியது என்னவென்றால், தேசத்தை கட்டியெழுப்பக்கூடிய திறமையானவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ளனர்,” என்பதே ஆகும்.

தேசத்தைக் கட்டியெழுப்ப விரும்புவோருக்கு புதிய ஆணை தேவை என்று அவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.








# பாடசாலைக்கு உரிய காணிகள் உத்தியோகபூர்வமாக கையளிப்பு

*கொழும்பு, மார்ச் 31*

மருதமுனை அல் மனார் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) பெண்கள் பிரிவு மற்றும் நற்பிட்டிமுனை லாபீர் வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளுக்குமான காணிக் கையளிப்பு நேற்று முன் தினம் கல்முனை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலியினால் உத்தியோகபூர்வமான முறையில் இரு பாடசாலைகளின் காணி பத்திரங்கள் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். சஹுதுல் நஜீமிடம் கையளிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் கல்முனை பிரதேச செயலக காணிப்பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எச்.எல்.எம் மபாஸ் மற்றும் காணி பயன்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எம் ஜெளபர் ஆகியோர் கலந்து கொண் டனர்.

(அ)

# நிந்தவூரில் ராணுவ முகாமை அகற்றுவதற்கு நடவடிக்கை!

## வர்த்தக கட்டடத் தொகுதியை அமைப்பதற்கு

அம்பாறை, மார்ச் 31

**நிந்தவூர் பிரதேச சபை அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்குள் முதலிடம் பெற்றமையால் பரிசுத் தொகையாக கிடைக்கப்பெற்ற 100000 அமெரிக்க டொலர் நிதியைக் கொண்டு நிந்தவூர் பிரதேச சபைக்கு சொந்தமான பிரதேச சபையின் பழைய கட்டடம் அமைந்துள்ள இடத்தில் பன்னை தொழிலாளர்களின் மேம்பாட்டிற்கான வர்த்தகக் கட்டட தொகுதியை அமைப்பதற்கான முன்னெடுப்புக்கள் இடம்பெற்று வருகின்றன.**

அதனடிப்படையில் பிரதேச சபையின் பழைய கட்டடத்தில் அமைந்திருக்கின்ற இராணுவ முகாமை அகற்றுவதற்கான முன்னெடுப்புக்களின் ஓர் அங்கமாக கடந்த புதன்கிழமை அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.எல்.ஏ. கமல் நெத்மினி அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரை நேரில் அழைத்து வந்து பார்வையிட்டார்.

இதன் போது இராணுவ உயர் அதிகாரி , அம்பாறை உதவி பொலிஸ் அத்தியட்சகர், நிந்தவூர் பிரதேச செயலாளர் ஏ.எல்.அப்துல் லதீப், நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எம்.ஏ. எம். அஷ்ரப் தாஹிர், பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச சபையின் கௌரவ முன்னாள் உறுப்பினர்களென பலரும் கலந்து கொண்டனர். (அ)



# சட்டத்தரணிகளின் பாவனைக்காக கல்முனையில் சட்ட நூலகம் திறப்பு



*அம்பாறை, மார்ச் 31*

கல்முனை நீதிமன்ற கட்டடத் தொகுதியின் சிவில் மேல்முறையீட்டு நீதிமன்ற கட்டடத்தில் புதிய சட்ட நூலகம் நேற்று முன் தினம் சட்டத்தரணிகளின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

கல்முனை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் எம். ஐ.றைசுல் ஹாதி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி ஜயராம் ட்ரொக்ஸி, கௌரவ அதிதிகளாக கல்முனை மாவட்ட நீதிபதி ஏ.எம் முஹம்மட் றியால், கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வின் முதலில் அதிதிகள் மாலை அணிவித்து வரவேற்கப்பட்ட பின்னர் புதிய சட்ட நூலகம் அதிதிகளால் நாடா வெட்டி உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

மத அனுஸ்டானம் இடம் பெற்றதை தொடர்ந்து கல்முனை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் எம். ஐ.றைசுல் ஹாதி 40 வருட காலத்தின் பின்னர் புதிய நூலக அமைக்கப்பட்ட வரலாறு அதற்கான உதவிகள் குறித்து தலைமையுரை வழங்கினார்.

# அம்பாறை பள்ளிவாசல்களுக்கு பேரீச்சம் பழங்கள் கையளிப்பு




*அம்பாறை, மார்ச் 31*

அம்பாறை மாவட்டத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட பள்ளிவாசல்களுக்கு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பேரீச்சம் பழங்களைக் கையளிக்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஏ.சுபைதீனின் ஒருங்கிணைப்பின் கீழ் இடம் பெற்ற இந் நிகழ்வில், பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன் கலந்து கொண்டதோடு, விசேட அதிதியாக சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக், மற்றும் ஏனைய அதிதிகளாக சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் ஏ.ஹிபத்துல் கரீம், அதன் செயலாளர் ஏ.எல்.எம்.மன்சூர், அதன் பேஷ் இமாம் எம்.ஐ. ஆதம்பாவா (ரஷாதி) ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ)

# வேலோடுமலை முருகனாலய வருடாந்த உற்சவம் ஆரம்பம்!

*அம்பாறை, மார்ச் 31*

ஈழத்து பழனி என அழைக்கப்படும் சித்தாண்டி வேலோடு மலை முருகன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவப் பெருவிழா நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகியது.

தொடர்ச்சியாக ஆறு நாட்கள் திருவிழா இடம்பெற்று ஏழாம் நாள் ஏப்ரல் ஐந்தாம் தேதி தீர்த்தோற்சவத்துடன் பெரு விழா நிறைவடைய இருக்கிறது என ஆலய தர்மகர்த்தா சுப்ரமணியம் தியாகராஜா தெரிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை சித்தாண்டி பொதுமக்களின் திருவிழாவாக இடம்பெற்றது. நேற்று காலை ஐந்து முப்பது மணிக்கு சித்தாண்டி பிள்ளையார் ஆலயத்திலிருந்து பாதயாத்திரை ஆரம்பித்து முருகனாலயத்தை சென்றடைந்தது.

அதேபோன்று நான்காம் திகதி காலை 5 மணிக்கு வந்தாறுமூலை பொதுமக்களின் திருவிழா ஸ்ரீ மகாவிஷ்ணு ஆலயத்தில் இருந்து பாற்குடபவனி இடம் பெறும்.



சித்தாண்டி மாவடி வேம்பு கொம்மாதுறை தேவபுரம் கோரலங்கேணி வந்தாறுமூலை மற்றும் ஆலயதிருவிழா குழுவினரால் இந்த ஏழு நாள் திருவிழாக்கள் இடம்பெற இருக்கின்றன.

பிரதம குரு சிவஸ்ரீ கு.க. அரவிந்த குருக்கள் தலைமையில் உற்சவம் தொடர்ச்சியாக இடம் பெறும் என்று ஆலய பரிபாலன சபை தர்மகர்த்தா சுப்பிரமணியம் தியாகராஜா தெரிவித்தார்.

(அ)

# கல்முனை சட்டத்தரணிகளின் இப்தார்

*அம்பாறை, மார்ச் 31*

கல்முனை சட்டத்தரணிகள் சங்கம் ஏற்பாடு செய்த விசேட இப்தார் நிகழ்வு சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி எம்.ஐ. றைசுல் ஹாதி தலைமையில் மருதமுனை தனியார் விடுதியில் நேற்று முன் தினம் இரவு நடைபெற்றது.



இதில் கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி ஜெயராம் ட்ரொக்ஸி, கல்முனை மாவட்ட நீதிபதி ஏ.எம் முஹம்மட் றியால், கல்முனை நீதிமன்ற நீதிவான் எம். எஸ்.எம் சம்சுதீன் ,கல்முனை காதி நீதவான் சிரேஷ்ட சட்டத்தரணி எப்.எம்.அமீருல் அன்சார் மௌலானா உட்பட கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் ஆண் மற்றும் பெண் சட்டத்தரணிகள் கலந்துகொண்டனர்.

குறித்த விசேட இப்தார் நிகழ்வில் நோன்பு திறக்கப்பட்டு பிரார்த்தனை இடம்பெற்று இரவு உணவுடன் சிறப்பாக நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஆங் சான் சூகியின் கட்சியும் கலைப்பு!

## இராணுவ நிர்வாகம் அறிவிப்பு



**நைபிட்டோ, மார்ச் 31**

**புதிய தேர்தல் சட்டத்தின் கீழ் மீண்டும் பதிவு செய்யத் தவறியதாகக் கூறி, பதவி நீக்கம் செய்யப்பட்ட தலைவர் ஆங் சான் சூகியின் கட்சி கலைக்கப்படுவதாக மியன்மாரின் ராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.**

ஜனநாயகத்துக்கான தேசிய லீக் கட்சி, ஆளும் இராணுவம் அறிவித்த காலக்கெடுவுக்குள் பதிவை மேற்கொள்ள தவறிய 40 அரசியல் கட்சிகளில் ஒன்று என்று செவ்வாயன்று மாலை தெரிவிக்கப்பட்டது.

புதிய தேர்தல்களை நடத்துவதற்கு முன்னதாக கடுமையான புதிய தேர்தல் சட்டத்தின் கீழ் மீண்டும் கட்சிகள் பதிவு செய்யப்பட வேண்டும் என்று கடந்த ஜனவரியில் இராணுவம் அறிவித்தது. அரசியல் கட்சிகளுக்கு இரண்டு மாத கால அவகாசம் கொடுக்கப்பட்டது. எனினும், இராணுவத்தின் அறிவிப்பு சுதந்திரமான அல்லது நியாயமான தேர்தலாக இருக்காது என பெரும்பாலான அரசியல் கட்சிகள் அறிவித்தன.

சட்டத்திற்குப் புறம்பான தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று என்எல்டி கூறியுள்ளது.

“பல அரசியல் தலைவர்கள் மற்றும் அரசியல் ஆர்வலர்கள் கைது செய்யப்பட்டு, மக்கள் இராணுவத்தால் சித்திரவதை செய்யப்படும் நேரத்தில் தேர்தல் நடத்தப்படும் என்பதை நாங்கள் முற்றிலும் ஏற்கவில்லை” என்று சூகியின் கட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களில் ஒருவரான போ போ ஓ கூறினார்.

நவம்பர் 2020 இல், நாட்டின் பாராளுமன்றத் தேர்தலில் ஜனநாயகத்துக்கான தேசிய லீக் கட்சி மகத்தான வெற்றியைப் பெற்றது. ஆனால் மூன்று மாதங்களுக்குள் இராணுவம் சதிப்புரட்சி நடத்தி ஆங் சான் சூகியை சிறையில் அடைத்தது.

77 வயதான நோபல் பரிசு பெற்ற இவர், இராணுவத்தால் கொண்டுவரப்பட்ட அரசியல் கறைபடிந்த வழக்குகளில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு மொத்தம் 33 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்து வருகிறார். அவர் அரசியலில் தீவிரமாக ஈடுபடாமல் இருக்கவே இந்த குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டதாக அவரது ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

சுயேச்சையான தேர்தல் கண்காணிப்பாளர்கள் பெரிய முறைகேடுகள் எதையும் கண்டுபிடிக்கவில்லை என்றாலும், பாரிய தேர்தல் மோசடி நடந்ததாக இராணுவம் சதிப்புரட்சியை நியாயப்படுத்தியது.

இப்போது மியன்மாரின் உயர்மட்டத் தலைவராக இருக்கும் மூத்த ஜெனரல் மின் ஆங் ஹ்லைங்கின் சொந்த அரசியல் அபிலாஷைகளிற்கு எதிராக அப்போதைய தேர்தல் முடிவுகள் அமைந்ததால், சதி புரட்சி நடத்தப்பட்டதாக நம்பப்படுகிறது.

புதிய தேர்தலுக்கான திகதி எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. இராணுவத்தின் சொந்தத் திட்டங்களின்படி, ஜூலை இறுதிக்குள் தேர்தல் நடத்தப்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தொழிற்சங்கத்துடன் பிரான்ஸ் அதிபர் அடுத்த வாரம் நேரில் பேசுவார்

*பாரிஸ், மார்ச் 31*

பிரான்ஸின் சர்ச்சைக்குரிய ஓய்வூதியச் சட்டம் மீதான அரசமைப்புக் கவுன்சிலின் தீர்ப்பு எதிர்வரும் ஏப்ரல் 14 ஆம் திகதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கவுன்சிலின் தீர்ப்பு இரண்டு முக்கிய முடிவுகளைக் கொண்டிருக்கும். ஓய்வூதிய வயதை 62 இல் இருந்து 64 ஆக அதிகரிக்கின்ற சட்டத் திருத்தம் நாட்டின் அரசமைப்புச் சட்டத்தை அடியொற்றிச் செல்கிறதா என்பது முதலாவது. இடதுசாரி நாடாளுமன்ற உறுப்பினர்களது கோரிக்கையின் படி ஓய்வூதியச் சீர்திருத்தம் மீது மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமா என்பதையும் கவுன்சிலின் தீர்ப்பு முடிவு செய்யும்.

அது இரண்டாவது. ஓய்வூதியச் சட்டப் பிரேரணை கடந்த 16 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சட்டமாக நிறைவேறியமை தெரிந்ததே.

பிரதமர் எலிசபெத் போர்னின் அரசு பிரேரணை மீது வாக்களிப்பைத் தவிர்த்துவிட்டு அரசமைப்பின் 49 ஆவது ஷரத்தின் மூன்றாவது அதிகாரத்தைப் பயன்படுத்தி அதனைச் சட்டமாக்கியிருந்தது. அதனை எதிர்த்து எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைகளில் அரசு தப்பிப் பிழைத்தது.

ஓய்வூதியத் திருத்தச் சட்டம் தற்போது சட்டமாக நிறைவேறியுள்ள போதிலும் அதனை நாட்டின் அரசமைப்பு அதிகார சபையாகிய அரசமைப்புக் கவுன்சில் ஏற்றுக்கொண்டால் மட்டுமே அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும்.

நாட்டின் அரசமைப்புக்கு முரணானது என்று கருதப்படுமிடத்து சட்டத்தின் சில பிரிவுகளைப் பகுதியாகவோ அல்லது சட்டத்தை முழுமையாகவோ நிராகரிக்கின்ற உயர் அதிகாரம் அரசமைப்புக் கவுன்சிலுக்கு உள்ளது.

நாடெங்கும் கொழுந்து விட்டு எரியும் கடும் மக்கள் உணர்வலைக்கு நடுவே முக்கியமான ஒரு சட்டம் மீது அரசமைப்புச் சபை வழங்கப் போகின்ற தீர்ப்பு எவ்வாறு அமையப் போகிறது என்ற எதிர்பார்ப்பு சகலரிடமும் தீவிரமாக உள்ளது.

இதேவேளை, அரசமைப்புக் கவுன்சிலின் தீர்ப்பு வெளிவருவதற்கு முன்பாகத் தொழிற்சங்கங்களை மீண்டும் பேச்சுக்கு அழைப்பதற்குப் பிரதமர் எலிசபெத் போர்ன் முடிவு செய்துள்ளார். அடுத்த வாரத்தில் இந்தப் பேச்சுக்கள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியத் திருத்தச் சட்ட விவகாரத்தில் தொழிற்சங்கங்களுக்கும் அரசுக்கும் இடையே நடைபெறவிருக்கின்ற பேச்சுக்களில் மூன்றாவது தரப்பு ஒன்று நடுநிலை வகிக்க வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கையை அரசுத்தரப்பு நிராகரித்து விட்டது.

சட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்து நடைமுறைப் படுத்துவதில் மக்ரோன் அரசு மிகத் திடமாக உள்ளது. மறுபுறத்தில் தொழிற்சங்கங்களோ ஓய்வூதிய வயதை 64 ஆக அதிகரிப்பதை ஏற்க முடியாது என்றவாறு கடும்போக்கைக் கொண்டுள்ளன. சட்டத் திருத்தத்தை மக்ரோன் வாபஸ் பெற வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இன்னமும் தொழிற்சங்கத் தலைவர்கள் பலர் இருக்கின்றனர். இந்த நிலையில் பேச்சுக்கள் எந்த அடிப்படையில், எது குறித்து எவ்வாறு தொடங்கப்படும் என்பதில் தெளிவற்ற நிலைமையே காணப்படுகிறது.

இதேவேளை, தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு அடுத்த கட்ட எதிர்ப்பு நாளாக ஏப்ரல் 6ஆம் திகதியை அறிவித்துள்ளது.

செவ்வாய்க்கிழமை நடந்த பத்தாவது கட்ட வேலை நிறுத்தம் மற்றும் பேரணிகளில் மக்களின் அணி திரள்வு வீழ்ச்சியைக் காட்டியுள்ளது. மாறாக பல நகரங்களிலும் பொலீஸார் மற்றும் வன்முறைக் குழுக்கள் இடையே வீதி மோதல்களே அதிகரித்துக் காணப்பட்டன.

# பாப்பரசர் வைத்தியசாலையில்!



*ரோம், மார்ச் 31*

திருத்தந்தை பிரான்சிஸ் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு சுவாசத்தொகுதியில் தொற்று ஏற்பட்டுள்ளதாக வத்திக்கான் தகவல்கள் தெரிவிக்கின்றன.

86 வயதான திருத்தந்தைக்கு கடந்த சில தினங்களாக சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டிருந்ததாக அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் பரிசுத்த பாப்பரசருக்கு கொரோனா தொற்று இல்லை எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருத்தந்தையை சில நாட்களுக்கு வைத்தியசாலையில் வைத்திருந்து முறையான சிகிச்சைகளும் பயிற்சிகளும் வழங்க வேண்டியுள்ளதாக வத்திக்கான் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாத இறுதியில் ஹங்கேரிக்கு விஜயம் மேற்கொள்வதற்கும் திருத்தந்தை பிரான்சிஸ் திட்டமிட்டிருந்தார் என்பதுக் குறிப்பிடத்தக்கது. (அ)

# மெக்ஸிக்கோ முகாமில் தீ விபத்து எட்டு சந்தேக நபர்கள்

*மெக்சிக்கோ சிற்றி, மார்ச் 31*

புலம்பெயர்ந்தோர் தடுப்பு மையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 38 பேர் இறந்ததற்குக் காரணமான எட்டு சந்தேக நபர்களை அடையாளம் கண்டுள்ளதாக மெக்ஸிக்கோ வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை ஏற்பட்ட தீவிபத்து ஒரு கொலை சம்பவமாக இருக்கலாம் என்ற கோணத்தில் இப்போது விசாரிக்கப்படுகிறது.

சந்தேகத்திற்குரியவர்களில் ஐந்து பேர் அமெரிக்க எல்லையில் உள்ள சியுடாட் ஜூவாரெஸ் நகரில் உள்ள பாதுகாப்புக் காவலர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய மற்றும் தென் அமெரிக்காவிலிருந்து வந்த பாதிக்கப்பட்டவர்கள் ஏன் விடுவிக்கப்படவில்லை என்பதை விளக்க அதிகாரிகள் பெருகிய அழுத்தத்தை எதிர்கொள்கின்றனர்.

இதற்குக் காரணமானவர்கள் சட்டத்தின்படி தண்டிக்கப்படுவார்கள் என்று மெக்ஸிக்கோ ஜனாதிபதி ஆண்ட்ரேஸ் மானுவல் லோபஸ் ஒப்ராடோர் கூறினார்.

எவ்வாறாயினும், புலம்பெயர்ந்தோர் சுற்றிவளைப்பின் போது தற்செயலாக தடுத்து வைக்கப்பட்டனர், மோசமான நிலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் மற்றும் தடுப்புக்காவலில் இருந்தபோது அவர்களுக்கு போதுமான தண்ணீர் வழங்கப்படவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

### அமெரிக்காவை தாக்கும் திறன் கொண்ட

# புதிய வகை அணு ஆயுதங்களை அறிமுகப்படுத்திய வடகொரியா

*பியொங்யாங், மார்ச் 31*

அமெரிக்க-தென்கொரிய படைகளின் கூட்டுப்போர் பயிற்சி மற்றும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து வடகொரியா நடத்தி வரும் தொடர் ஏவுகணை சோதனைகளால் கொரியா தீபகற்பத்தில் பதற்றம் அதிகரித்து வருகின்றது.

இந்த பரபரப்புக்கு மத்தியில் வடகொரியா புதிய அணு ஆயுதங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

அந்த நாட்டின் ஜனாதிபதி கிம் ஜாங் அன் புதிய அணு ஆயுதங்கள் மற்றும் தொழில்நுட்பத்தை ஆய்வு செய்தபோது, ஏவுகணைகளில் வைத்து செலுத்தக் கூடிய ஹவாசன்-31எஸ் என்று அழைக்கப்படும் சிறிய ரக அணு குண்டுகள் உள்ளிட்ட ஆயுதங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இந்த அணு குண்டுகள் அளவில் சிறியதாக இருந்தாலும் அமெரிக்காவைத் தாக்கும் திறன் கொண்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளில் பொருத்தும் அளவுக்கு வடிவமைக்கப்பட்டிருக் காலம் என்று அணு ஆயுத நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

ஈழநாடு






# டோனிக்கு இந்த தொடர் கடைசியாகஇருக்காது!

## ரோஹித் சர்மா தெரிவிப்பு

*மும்பை, மார்ச் 31*

ஐ. பி. எல். இருபது - 20 தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் எம். எஸ். டோனிக்கு இந்தத் தொடரே கடைசியாக இருக்கும் என்று நினைக்க வில்லை என மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவர் ரோஹித் சர்மா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறும்போது, "ஐ. பி. எல். தொடரில் டோனிக்கு இது கடைசித் தொடராக இருக்கும் என நான் கருதவில்லை. இதை நான் கடந்த 2 முதல் 3 வருடங்களாக கேள்விப்பட்டு வருகிறேன். அவர், இன்னும் விளையாடுவதற்கான உடல் தகுதியுடன் இருக்கிறார் என்றே நான் கருதுகிறேன். டோனி தொடர்ந்து விளையாடுவார் என்றே நினைக்கிறேன்" என்றார்.

அவுஸ்திரேலியா, சென்னை அணிகளின் முன்னாள் வீரரான ஷேன் வற்சன் கூறும்போது, "எம். எஸ். டோனிக்கு இதுதான் கடைசித் தொடராக இருக்கும் என நான் கேள்விப்படுகிறேன். ஆனால், நான் அவ்வாறு நினைக்கவில்லை. டோனி அடுத்த 3 முதல் 4 ஆண்டுகளுக்கு விளையாடலாம்" என்றார். (ஐ)

## நட்பு ரீதியான உதைபந்து:

# ஜேர்மனி அணியை வீழ்த்தி பெல்ஜியம் வரலாற்று வெற்றி!



*பெர்லின், மார்ச் 31*

சர்வதேச உதைபந்தாட்டத்தின் 70 ஆண்டு வரலாற்றில் முதன் முறையாக ஜேர்மனியை வென்றது பெல்ஜியம்.

ஜேர்மனியில் நடந்த நட்பு உதைபந்தாட்டப் போட்டியில் உலகத் தரவரிசையில் 4ஆவது இடத்திலுள்ள பெல்ஜியம் அணி, 14ஆவது இடத்தில் உள்ள ஜேர்மனியை சந்தித்தது. போட்டி தொடக்கத்திலேயே மிரட்டிய பெல்ஜியம். 6ஆவது நிமிடம் யான்னிக் ஒரு கோல் அடிக்க, அடுத்த மூன்றாவது நிமிடத்தில் லுகாகு (9ஆவது நிமிடம்) தன் பங்குக்கு ஒரு கோல் அடித்தார்.

44ஆவது நிமிடம் கிடைத்த 'பெனால்டி' வாய்ப்பில் ஜேர்மனியின் நிக்லஸ் ஒரு கோல் அடித்தார். முதல் பாதியில் பெல்ஜியம் 2:1 என முந்தியது. இரண்டாவது பாதியில் 78ஆவது நிமிடத்தில் கெவின் டி புருய்ன் (பெல்ஜியம்) ஒரு கோல் அடித்தார். 87ஆவது நிமிடம் செர்கே ஒரு கோல் அடித்த போதும் ஜேர்மனி 2:3 என வீழ்ந்தது.

சர்வதேச உதைபந்தாட்டத்தின் 70 ஆண்டு வரலாற்றில் பெல்ஜியம் அணி, ஜேர்மனியை வீழ்த்தியது இது தான் முதன்முறை. இதற்கு முன் 1954இல் செப். 26இல் நடந்த நட்பு போட்டியில் பெல்ஜியம் 2:0 என வென்றிருந்தது. அடுத்து மோதிய 16 போட்டியில் பெல்ஜியம் 15இல் தோற்றது. 1 போட்டி மட்டும் சமநிலையில் முடிவடைந்திருந்தது.

# இருபது - 20 போட்டியில் சகீப் புதிய சாதனை!

*சிட்டாகொங், மார்ச் 31*

சர்வதேச இருபது - 20 கிரிக்கெட்டில் அதிக விக்கெட்களை கைப்பற்றி பங்களாதேஷ் வீரர் சகீப் அல் ஹசன் சாதனை படைத்துள்ளார்.

அயர்லாந்துக்கு எதிரான போட்டியில் 5 விக்கெட்களை வீழ்த்திய தன் மூலம் அவர் இந்த சாதனையை படைத்துள்ளார்.

36 வயதான சகீப், சகலதுறை வீரராக பங்களாதேஷ் அணிக்காக விளையாடி வருகிறார். 114 இருபது -20 போட்டிகளில் விளையாடியுள்ள அவர் மொத்தம் 136 விக்கெட்களை கைப்பற்றியுள்ளார். இதன் மூலம் நியூசிலாந்து வீரர் ரிம் சௌதியை அவர் முந்தியுள்ளார். அயர்லாந்து வீரர் ஜோர்ஜ் டாக்ரோலை வீழ்த்தியதன் மூலம் இந்த சாதனையை சகீப் படைத்தார். (ஐ)






# மியாமி ஓப்பன் ரென்னிஸ் பெகுலா அரையிறுதிக்கு தகுதி!

*மியாமி, மார்ச் 31*

அமெரிக்காவின் பெகுலா மியாமி ரென்னிஸ் தொடரின் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மியாமி ஓப்பன் சர்வதேச ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடந்து வருகிறது.

இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவில் காலிறுதி ஆட்டம் ஒன்றில் உலக தரவரிசையில் 3-வது இடத்தில் இருக்கும் ஜெசிகா பெகுலா (அமெரிக்கா), 26ஆம் நிலை வீராங்கனையான அனஸ்டாசியா படபோவாவை (ரஷ்யா) எதிர்கொண்டார்.

மழை காரணமாக 4 மணி நேர தாமதத்துக்கு பிறகு தொடங்கிய இந்த ஆட்டத்தில் ஜெசிகா பெகுலா 4-6, 6-3, 7-6 (7-2) என்ற செற் கணக்கில் அனஸ்டாசியா படபோவாவை வீழ்த்தி தொடர்ந்து 2ஆவது முறையாக அரையிறுதிக்கு முன்னேறினார்.

இதன் மூலம் செரீனா வில்லியம்ஸுக்கு பிறகு (2014, 2015ஆம் ஆண்டு) இந்த போட்டி தொடரில் தொடர்ந்து 2ஆவது முறையாக அரையிறுதிக்கு முன்னேறிய முதல் அமெரிக்க வீராங்கனை என்ற பெருமையை பெகுலா பெற்றார்.

## மியாமி ஓப்பன் ரென்னிஸ்

# மெத்வதேவ், அல்காரஸ் காலிறுதிக்கு முன்னேற்றம்!

*மியாமி, மார்ச் 31*

மியாமி ஓப்பன் ரென்னிஸ் தொடரின் காலிறுதி சுற்றுக்கு மெத்வதேவ், அல்காரஸ் ஆகியோர் முன்னேறினர்.

மியாமி ஓப்பன் ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடக்கிறது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் 4ஆவது சுற்று ஆட்டத்தில் முன்னாள் முதல் நிலை வீரரான வீரரான டேனில் மெத்வதேவ் (ரஷ்யா) 6-4, 6-2 என்ற நேர்செற்றில் பிரான்ஸின் குயின்ரன் ஹோலிஸை தோற்கடித்து இறுதிச் சுற்றுக்கு முன்னேறினார்.

இதேசமயம், மற்றோர் ஆட்டத்தில் முதல்நிலை வீரரும், நடப்பு சம்பியனுமான கார்லஸ் அல்காரஸ் (ஸ்பெயின்) 6-4, 6-4 என்ற நேர் செற்றில் அமெரிக்காவின் ரொம்மி போலை வீழ்த்தி தொடர்ச்சியாக 9ஆவது வெற்றியுடன் காலிறுதியை எட்டினார். (ஐ)



## ஒருநாள் உலகக் கிண்ண கிரிக்கெட்:

# பாகிஸ்தானுக்கான போட்டிகளை பங்களாதேஷில் நடத்த ஆலோசனை!



*டுபாய், மார்ச் 31*

ஒருநாள் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி யில் பாகிஸ்தான் ஆடும் போட்டிகளை பங்களா தேஷில் நடத்த ஆலோசிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் எதிர்வரும் செப்ரெம்பரில் ஆசியக் கிண்ணம் கிரிக்கெட் போட்டி நடக்கிறது. பாகிஸ்தானுக்கு செல்ல இந்தியா மறுத் தது. இதனால், இந்திய அணிக்கான போட்டி களை மட்டும் பொதுவான இடத்தில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்திய அணி பாகிஸ்தானுக்கு வராவிட் டால், இந்தியாவில் ஒக்ரோபர், நவம்பரில் நடைபெறும் உலகக் கிண்ணப் போட்டியை புறக்கணிப்போம் என்று பாகிஸ்தான் கிரிக் கெட் சபை எச்சரித்தது.

இந்த நிலையில் இந்த விவகாரம் குறித்து டுபாயில் சமீபத்தில் நடந்த சர்வதேச கிரிக்கெட் சபையின் கூட் டத்தில் சம்பந்தப்பட்ட நிர்வாகிகள் விவாதித்தனர். இதில் உலகக் கிண்ணப் போட்டியில் பாகிஸ்தான் அணிக்கான லீக் போட்டிகளை பங்களாதேஷில் நடத்த ஆலோசிக்கப்பட்டது. எனினும், இந்த விடயத்தில் இறுதி முடிவு இன்னமும் எடுக்கப்படவில்லை. (ஐ)

# வர்த்தகத்துக்கு இந்திய ரூபாய் மிலிந்த - ரிசேர்வ் வங்கி பேச்சு!

புதுடில்லி, மார்ச் 31

**இந்திய ரூபாயை பயன்படுத்தி வர்த்தக நடவடிக்கைகளை விஸ்தரிப்பது குறித்து இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொறகொட இந்திய ரிசேர்வ் வங்கியின் ஆளுநர் சக்திஹன்ட தாஸுடன் பேச்சு நடத்தினார்.**

இந்தியாவின் உயர் அதிகாரிகளுடனான தனது ஈடுபாட்டை தொடரும் இலங்கை தூதுவர் மும்பையில் இந்திய ரிசேர்வ் வங்கியின் தலைமையகத்தில் ரிசேர்வ் வங்கியின் ஆளுநரை சந்தித்து பேச்சு நடத்தியிருந்தார்.

இருவருக்கும் இடையிலான பேச்சுகள் மிகவும் சுமுகமான சூழ்நிலையில் இடம்பெற்றன. இரு தரப்பு பொருளாதார ஒத்துழைப்பு உட்பட பல விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது என்று மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார ஸ்திரதன்மையை உறுதி செய்வதற்கான இந்தியாவின் உதவிகளுக்கும் இந்த சந்திப்பில் மிலிந்த நன்றி தெரிவித்திருந்தார்.

குறிப்பாக இந்திய ரிசேர்வ் வங்கியின் நேரடி தலையீட்டுடன் இடம்பெற்ற பரிமாற்ற ஏற்பாடுகள் மற்றும் கொடுப்பனவுகளை ஒத்திவைத்தல் போன்றவற்றுக்கு அவர் நன்றியைத் தெரிவித்தார்.



இந்திய ரிசேர்வ் வங்கியின் ஆளுநரும் இலங்கை தூதுவரும் இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான வழிவகைகள் குறித்து ஆராய்ந்துள்ளனர்.

மின்சாரம், எரிசக்தி துறைமுகங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சுற்றுலா தகவல் தொழில்நுட்ப சேவைகள் போன்ற துறைகளில் பொருளாதாரங்களை அதிகளவில் ஒருங்கிணைப்பதன் மூலம் இந்திய இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு வழங்கக்கூடிய பங்களிப்பு குறித்தும் பேசப்பட்டது.

இந்த சந்திப்பின்போது, இந்திய ரூபாய் விரிவாக்கம் குறித்து இருவரும் ஆராய்ந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சஜித் தரப்பின் 40 எம். பிக்கள் ஜனாதிபதியுடன் இணைவர்!

## ஐக்கிய தேசியக் கட்சி சொல்கிறது

கொழும்பு, மார்ச் 31

ஐக்கிய மக்கள் சக்தியின் 40 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணையவுள்ளனர் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் விஜயமன்னே தெரிவித்துள்ளார்.

இந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு பல்வேறு வழிகளில் ஜனாதிபதிக்கு உறுதிமொழியை வழங்கினர் என்றும் அவர் தெரிவித்தார். அத்துடன், தமக்கும் தனிப்பட்ட முறையில் இதனைத் தெரிவித்தனர் என்றும் அவர் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, காலியில் உள்ள சுற்றுலா ஹோட்டல்களுக்கு சென்று ஆர்ப்பாட்டம் செய்து வெளிநாட்டினரைப் பயமுறுத்தி சுற்றுலா வர்த்தகத்தை உடைக்க ஜே. வி. பி. முயற்சிக்கிறது என்றும் அவர் சாடினார். (ஐ)

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, மார்ச் 31

மாத்தறையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

மாத்தறை - மிதிகம - குருபிபிலை பிரதேசத்தில் காரொன்றில் வந்த இனந்தெரியாத குழு ஒருவர் மீது துப்பாக்கிச் சூட்டு தாக்குதலை நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளது.

இதில் படுகாயமடைந்த அவர் மாத்தறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். உயிரிழந்தவர் 32 வயதுடைய மிதிகம பிரதேசத்தைச் சேர்ந்த உணவகம் ஒன்றின் உரிமையாளராவார்.

# 20 இலட்சம் மக்களுக்கு உலக உணவு திட்டம் உதவி!

கொழும்பு, மார்ச் 31

ஜூன் 2022 இல் அவசரகால நிலைமை தொடங்கியதிலிருந்து இலங்கையில் 20 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் உலக உணவு திட்டத்தின் உதவியைப் பெற்றனர் என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கை தொடர்பான அதன் சமீபத்திய நிலைமை அறிக்கையில், உலக உணவு திட்டத்திடம் 10 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் அவசர உணவு மற்றும் பண உதவியைப் பெற்றுள்ளனர். மேலும் 10 இலட்சம் பாடசாலை மாணவர்கள் பாடசாலை உணவைப் பெற்றுள்ளனர்.

அவசரகால நடவடிக்கையின் ஒரு பகுதியாக நாடு முழுவதும் 12 ஆயிரம் மெற்றிக் தொன் பொருட்களை அனுப்பப்பட்டுள்ளது. பெப்ரவரி 20 மற்றும் 2023 மார்ச் 20இற்க்கு இடையில், ஒரு இலட்சத்து 41 ஆயிரத்து 85 பாடசாலை மாணவர்களுக்கு ஆயிரத்து 37 பாடசாலைகளில் உணவுக்காக வலுவூட்டப்பட்ட அரிசியை வழங்கியது.

இலங்கையில் 32 வீதமான குடும்பங்கள் உணவு பாதுகாப்பற்ற நிலையில் இருக்கின்றன. 73 வீதமான குடும்பங்கள் எதிர்மறையான உணவு மற்றும் வாழ்வாதார அடிப்படையிலான சமாளிப்பு உத்திகளை தொடர்ந்து பின்பற்றுகின்றன என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

# ரூ. 100,000 சம்பளம் பெறுவோரும் உண்ணும் உணவை குறைத்தனர்!

## விவசாய நிறுவனத்தின் ஆய்வில் தகவல்

கொழும்பு, மார்ச் 31

இந்த நாட்டில் 32 இலட்சம் குடும்பங்கள் உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கின்றன என்று ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் சிரேஷ்ட ஆராய்ச்சி அதிகாரி பிரசன்ன விஜயசிறி தெரிவித்துள்ளார்.

அத்துடன், 80 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் ரூபாய் வரை வருமானம் ஈட்டும் மற்றும் சிறுதொழில் மூலம் வருமானம் ஈட்டும் மக்களின் உணவுப் பாவனையும் குறைந்துள்ளது.

ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வு மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இலங்கையில் பொருளாதார நெருக்கடி மற்றும் உள்நாட்டு பொருளாதார பாதுகாப்பு" என்ற ஆய்வுக்கட்டுரையை சமர்ப்பித்த சிரேஷ்ட ஆய்வு அதிகாரி பிரசன்ன விஜயசிறி, மாதமொன்றுக்கு எண்பதாயிரம் முதல் ஒரு இலட்சம் ரூபாய் வரை வருமானம் ஈட்டும் மற்றும் சிறுதொழில் மூலம் வருமானம் ஈட்டும் மக்களின் உணவுப் பாவனையும் குறைந்துள்ளது.

இந்த நாட்டில் உள்ள குடும்பங்களின் உணவுப் பாதுகாப்பின்மை 54 சதவீதமாக இருப்பதாகவும், நாட்டின் நகர்ப்புற, கிராமப்புற மற்றும் தோட்டத் துறையில் உணவுப் பாதுகாப்பின்மை முறையே 43, 53 மற்றும் 67 சதவீதமாக இருக்கிறது.

கடந்த 2021ஆம் ஆண்டை விட, 2022இல், சிக்கன், மீன், முட்டை உள்ளிட்ட புரத உணவுகளை உட்கொள்வதை 50 சதவீதம் குறைத்துள்ளதாக ஆய்வில் தெரியவந்துள்ளது. இந்த நிலை இந்த ஆண்டிலும் தொடர்கிறது என்றும் அவர் கூறினார். (ஐ)

# இரு வேறு இடங்களில் இருவர் குத்திக் கொலை!

கொழும்பு, மார்ச் 31

நாட்டின் இரு வேறு இடங்களில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் பெண் ஒருவர் உட்பட இருவர் கொல்லப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

கம்பஹா - மாகொவிட்ட பிரதேசத்தில் பெண் ஒருவரை ஒருவர் கூரிய ஆயுதத்தால் குத்தியதால் அவர் படுகாயமடைந்தார். மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். மாகொவிட்டவை சேர்ந்த 57 வயதான பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

காணிப் பிரச்னை தொடர்பாக நீண்டகாலம் நிலவிய முரண்பாடே இந்தக் கொலைக்கு காரணம். அத்துடன், சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, அவிசாவளை - கொஸ்கம பிரதேசத்தில் இரு குழுக்களிடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் குத்திக் கொல்லப்பட்டார்.

உயிரிழந்தவர் 35 வயதுடைய கலுயக்கல பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். இந்தச் சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை. கொஸ்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# ரயில் கட்டணம் மாறாது



கொழும்பு, மார்ச் 31

டீசலின் விலை குறைந்துள்ளபோதிலும் ரயில் கட்டணத்தை குறைப்பதற்கான சாத்தியக்கூறு குறித்து கலந்துரையாடப்படவில்லை என்று பதில் போக்குவரத்து அமைச்சர் லசந்த அலகியவண்ணதெரிவித்தார். பேருந்து கட்டணத்துடன் ஒப்பிடுகையில் ரயில் கட்டணங் கள் 50 வீதம் குறைவாகவே காணப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

# புதுவருடத்தை முன்னிட்டு விசேட பேருந்து சேவைகள்

கொழும்பு, மார்ச் 31

தமிழ் - சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு விசேட பேருந்து சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில், எதிர்வரும் ஏப்ரல் 8 ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை இந்த பேருந்து சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அத்துடன், இந்தக் காலப்பகுதியில் பகல் மற்றும் இரவு வேளைகளில் விசேட நெடுந்தூர பேருந்து சேவைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது. (ஐ)

# கஞ்சாவுடன் இருவர் கைது!

கொழும்பு, மார்ச் 31

12 கிலோ கஞ்சாவுடன் இருவர் காட்டுப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர். எனினும், ஒருவர் தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய மொனராகலை, ஒக்கம்பிட்டியில் வைத்து இந்தக் கைது இடம்பெற்றது. இதன்போது, 12 கிலோ 710 கிராம் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டனர். 14 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் தப்பிச் சென்றுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் எம்பிலிப்பிட்டியை சேர்ந்த 23, 26 வயது நபர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## மட்டு.மாவட்ட...

நிலையில், மட்டக்களப்பில் முன்னெடுக்கப்படும் காணி அபகரிப்புக்கு எதிராக பொதுமக்களும் இரா. சாணக்கியன் எம். பியும் மாவட்ட செயலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தை முன்னெடுத்தனர். இதன்போது, மாவட்ட செயலகம் முன்பாக பெரும் அமளி துமளி ஏற்பட்டது.

நேற்று மாவட்ட செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஆரம்பமான நிலையில் மாவட்டச் செயலகத்துக்கு ஊர்வலமாக வந்த பொதுமக்கள் மாவட்ட செயலகத்துக்குள் நுழைய முற்பட்டனர். அந்தச் சமயம் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே, முறுகல் நிலை ஏற்பட்டது. இதையடுத்து, செயலகத்துக்குள் நுழைய முடியாதவாறு நுழைவாயில் கதவுகள் மூடப்பட்டன. இதனால், நுழைவாயில் முன்பாக போராட்டக்காரர்கள் அமர்ந்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

வாகனேரி பகுதியில், சூரிய மின்கல மின்திட்டத்தை அமைப்பதற்காக, விவசாய காணியை எடுக்கமுனையும் செயல்பாட்டை கண்டித்தும், வாகரைப் பகுதியில், இல்மனைட் அகழ்வை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முன்னெடுக்கப்படும் செயல்பாட்டை நிறுத்தக்கோரியும் வாகரையில், காணிகள் அபகரிக்கப்படு வதை நிறுத்தக் கோரியும் இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டங்களை நடத்தாமல், மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தை நடத்தி, காணி தொடர்பான தமக்கு சாதகமான தீர்மானங்களை எடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று இதன்போது கருத்துகள் தெரிவிக்கப்பட்டன.

இதேநேரம், மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்கு வந்த, இராஜாங்க அமைச்சர் ச. வியாழேந்திரனை உள் நுழைவதற்கு அனுமதிக்காத நிலையில், பொலிஸாருக்கும் இராஜாங்க அமைச்சருக்கும் இடையே தர்க்கம் ஏற்பட்டது.

இதன்போது ஆர்ப்பாட்டத்துக்கு தனது ஆதரவைத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், "பொது மக்களின் கருத்துகள் பெற்றுக்கொள்ளப்படாமல், ஒரு சில அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் முன்னெடுக்கும் செயல்பாடுகள் காரணமாக மாவட்டம் பல கஷ்டங்களை எதிர்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளது" - என்றார்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட நிலையில், மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்துக்கு செல்வதற்கு அனுமதியை பொலிஸாரிடம் கோரிய நிலையில், பொலிஸார் இராஜாங்க அமைச்சரையும் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் மற்றும் செய்தியாளர்களையும் செயலகத்துக்குள் செல்வதற்கு அனுமதித்தனர்.

இதைத் தொடர்ந்து, அபிவிருத்திக் குழு கூட்ட இடத்துக்கு சென்றவர்களால் அங்கு குழப்பநிலை ஏற்பட்டது.

மக்கள் வெளியே போராடிக் கொண்டிருக்கும் நிலையில், அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றிவிட்டு அல்லது அவர்களின் கோரிக்கைக்கு சரியான பதிலை வழங்கி விட்டு, மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தை நடத்துங்கள் என்று சாணக்கியனும் வியாழேந்திரனும் கூறினர்.

இதன்போது, கூட்டத்தை தலைமை தாங்கி நடத்திய அபிவிருத்தி குழு தலைவர் சி. சந்திரகாந்தனுக்கும் சாணக்கியனுக்கும் இடையே தர்க்கம் ஏற்பட்டது.

இதைத்தொடர்ந்து, மாவட்ட செயலகத்தின் காணி தொடர்பில் தன்னால், தகவல் அறியும் சட்டத்தில் கோரப்பட்ட தகவல்கள் வழங்கப்படாமைக்கான காரணங்களை கோரிய நிலையில், அது தொடர்பான விளக்கங்கள் அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் ஆகியோரால் வழங்கப்பட்ட போதிலும், அதனை ஏற்றுக்கொள்ளாத, இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், "30 வருடங்களாக நிலத்தைப் பாதுகாப்பதற்காக தமிழ் மக்கள் போராடிய நிலையில், இன்று அந்த நிலத்துக்கு ஆபத்தான நிலையேற்பட்டுள்ளதால், இங்கு அதற்கான சரியான தெளிவுபடுத்தல்கள் வழங்கப்படாத நிலையில், இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதில் பயனில்லை எனக் கூறி, அங்கிருந்து வெளியேறினார்.

இதைத் தொடர்ந்து, இரா. சாணக்கியனும், சில வினாக்களை, அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் எழுப்பினார். அவற்றுக்கும் உரிய பதில்கள் கிடைக்காத நிலையில், அவரும் கூட்டத்திலிருந்து வெளியேறினார். இதன் பின்னர், கூட்டம் வழமைக்கு திரும்பியது.

(ஐ-06)

## எதிர்ப்பு...

கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள் ளது. அனைத்து அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்களை உள்ளடக்கிய தாக இந்த போராட்டத்தை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான முன்னேற்பாட்டு கூட்டம் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த கூட்டத்தில் சகல அரசியல் கட்சிகளையும் பொது அமைப்புக்களையும் வேறுபாடுகள் களைந்து இணையுமாறு ரெலோ பேச்சாளர் கு. சுரேந்திரன் அழைப்பு விடுத்துள்ளார். (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் 6இல்)

## விசாரணை...

உரையாற்றியபோது இதனை தெரிவித்த ஜனாதிபதி, தொல்பொருள் திணைக்களத்துடன் வவுனியாவிலும் கொழும்பிலும் இரண்டு சந்திப்புக்கள் நடத்தப்பட்டுள்ளன. எனினும், இன்னும் அந்த பிரச்னை தொடர்கிறது. வனபாதுகாப்பு திணைக்களத்துடனும் இவ்வாறான பிரச்னைகள் உள்ளன. இவ்வாறான பிரச்னைகள் வடக்கில் மாத்திர மன்றி வடமத்திய மாகாணத்திலும் மொனராகலை மாவட்டத்திலும் உள்ளன என்றும் ஜனாதிபதி தெரிவித துள்ளார்.

## விகாரை...

அவ்வாறு நீதிமன்றக் கட்டளை மீறப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் மற்றும் தொல்லியல் திணைக்கள தரப்பினர் 30.03.2023 ஆம் திகதியன்று நீதிமன்றில் தோன்றி தமது அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும் என்று முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் ரி.சரணராஜா உத்தரவிட்டிருந்தார்.

இதற்கமைய, இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது, தமது தரப்பில் மூத்த சட்டத்தரணிகளும் அதிகாரிகளும் நீதிமன்றுக்கு வர முடியாத நிலை உள்ளதால் தவணை வழங்குமாறு பொலிஸாரும், தொல்பொருள் திணைக்களமும் நீதிவானிடம் கோரினர்.

இந்நிலையில் குருந்தூர்மலைப் பிரதேசத்திலே நீதிமன்றக் கட்டளையை மீறி பௌத்த விகாரைக்குரிய கட்டுமானப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கபடுவதானது, நீதிமன்றத்தை அவமதித்து இடம்பெறுகின்ற செயல் பாடு என, குருந்தூர்மலை ஆதி சிவன் ஐயனார் ஆலயம் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியிருந்தனர். அத்துடன், பொதுமக்கள் நீதிமன்றின் மேல் வைத்திருக்கின்ற நம்பிக்கையைக் கேள் விக்கு உள்ளாக்கும் செயல்பாடு என்றும் அவர்கள் வாதிட்டனர்.

மேலும், குருந்தூர் மலைப் பிரதேசத்திற்கு நீதிவான் நேரடியாக வருகை தந்து அங்கு இடம்பெறும் விடயங்களை பார்வையிட்டு, ஏற்கனவே இருந்த நிலையை விட புதிதாகக் கட்டடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவா, அல்லது மேம்படுத்தல் செய்யப்பட்டிருக்கின்றனவா என்பதனைப் பார்வையிட்டு, அதனடிப்படையில் வலிதான கட்டளை ஒன்றை வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, தொல்லியல் திணைக்களம் மற்றும், பொலிஸார் அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஏப்ரல் 27ஆம் திகதிக்கு வழக்கை ஒத்தி வைத்தார்.

## உரத்துக்கும்...

உர விநியோகத்திற்காக கடந்த முறை 670 கோடி ரூபாய் செலவிடப்பட்டதாகக் குறிப்பிட்ட அமைச்சர், வீழ்ச்சியடைந்துள்ள விவசாயிகள் மீண்டெழுவதற்கான காலமாக இந்த பருவம் அமையும் எனவும் தெரிவித்தார். (ஐ)

## இலங்கை...

தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந் திரகுமார் பொன்னம் பலம்.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 52ஆவது தொடரின் பக்க அமர்வு ஒன்றில் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த பெப்ரவரியில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவைச் சேர்ந்தவர்கள் வட மாகாணத்துக்கு சென்று பாதிக்கப்பட்ட தரப்புகளான - வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், சிவில் சமூக செயல்பாட்டாளர்கள், தமிழ் அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் எனப் பலரையும் சந்தித்தனர். இச்சந்திப்புகளின்போது, பழையவற்றை மறந்துவிடுமாறும், பொறுப்பு கூறலை வலியுறுத்த வேண்டாம் எனவும் முன்னைய குற்றச்செயல்கள் பற்றிய விடயங்களை அரசாங்கத்தால் அமைக் கப்படவுள்ள உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு கையாளும் எனவும், தாம் சந்தித்தவர்களிடம் பரப்புரையில் ஈடுபட்டனர். அத்துடன், அழுத்தங்களையும் பிரயோகித்துள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களும், தமிழ்ச் செயல்பாட்டாளர்களும் இந்த ஆலோசனைகளை நிராகரித்து, சர்வதேச குற்றவியல் பொறுப்புக்கூறல் பொறி முறையை வலியுறுத்தியபோது, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் தங்களது கோபத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

மேற்படி ஆணைக்குழு தனது களப்பயணத்தை முடித்துக்கொண்டு வெளியிட்ட அறிக்கையில், உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு போன்ற உள்ளகப் பொறிமுறையை அமைப்பதற்கு, தாம் சந்தித்த பாதிக்கப்பட்ட தரப்புகள் இணங்கின என்று தவறாகக் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு நடுநிலையானது என்று ஐ.நா. மனித உரிமைகள் சபையானது, இனியும் பாசாங்கு செய்ய முடியுமா?

இலங்கையில் தமிழர்கள் ஒரு தேசமாக, சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய அனைத்துத் தகைமைகளையும் கொண்டிருக்கிறார்கள். தமிழ் மக்கள் தமது பொருண்மிய, சமூக, கலாசார மேம்பாட்டை மேற்கொள்வதற்கான உரிமையை, தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்கள் மறுத்துவந்த காரணத்தாலும் தமிழ் மக்களின் இருப்புக்கு ஆபத்து உருவாகி வந்ததாலும், 1977ஆம் ஆண்டு, தமது சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒரு தனிநாட்டை அமைப்பதற்கு ஆதரவு வழங்கி, ஜனநாயக ரீதியில் பெருந்திரளாக வாக்களித்தார்கள்.

அதன்பின்னர், இலங்கை அரசாங்கம் அரசியலமைப்பில் கொண்டு வந்த 6ஆவது திருத்தத்தின் அடிப்படையில், தனிநாடு கோருவதை சட்டவிரோதமான செயலாக ஆக்கியுள்ளது. நடைமுறையில் இந்த விடயம் தவறாக வியாக்கியானப்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது நடைமுறையிலிருக்கின்ற, மத்தியில் அதிகாரங்களை குவித்து வைத்திருக்கும் ஒற்றையாட்சி முறையிலான அரசமைப்பிலிருந்து, அதிகாரப் பரவலாக்கத்தை நோக்கிய மாற்றங்கள் பரிந்துரைக்கப்படுவதைக்கூட, பிரிவினை வாதமாக பார்க்கப்படும் நிலையே காணப்படுகிறது. இதன் விளைவாக- தமது அரசியல் நிலைபாடு தொடர்பில் காத்திரமான உரையாடலுக்கான வெளி, தமிழ்மக்களுக்கு மறுக்கப்படுகிறது - என்றார். (ஐ)

## ஐ.எம்.எவ்...

பணக்காரர்கள் சிலருக்கு நன்மை ஏற்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள சட்டங்களே இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணியாக அமைந்துள்ளது. அன்றாடம் வாழ்வாதாரத்துக்காகப் போராடும் மக்களின் மீது சுமையை ஏற்படுத்தக்கூடாது என்றும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## போராட்டத்தில்...

பெயர்த்து உடைத்து எறியப்பட்டன. இதற்கு கண்டனம் தெரிவித்தும் ஆலயத்தை மீண்டும் அமைக்க வலியுறுத்தியும் வவுனியாவில் நேற்று போராட்டம் நடைபெற்றது.

இந்தப் போராட்டத்தில் வடக்கில் இருந்தும் ஏராளமானவர்கள் பங்கேற்றிருந்தனர். போராட்டம் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் முடிவடைந்ததைத் தொடர்ந்து, போராட்டக்காரர்களில் ஒரு பகுதியினர் 6 பேருந்துகளில் வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்துக்கு சென்று வழிபட்டனர்.

ஏறுவதற்கு கடினமான பாதை கொண்ட குன்றில் வயதானவர்கள் பலரும் ஆதிசிவன் இருந்த இடத்தில் வழிபட்டனர். அத்துடன், வேலன் சுவாமிகள் தலைமையில் அங்கு பஜனையும் நடைபெற்றது. (ஐ)

## வவுனியாவில்...

ஹொரவப்பொத்தானை வீதியை அடைந்து, மருத்துவமனை சுற்றுவட்ட வீதி ஊடாக மாவட்ட செயலகத்தை சென்றடைந்தது.

ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் "வெடுக்குநாறிமலை மீதான தாக்குதல் கௌதம புத்தரின் ஆன்மிகத் தோல்வி", "ஈழத்தமிழனை வேரறுக்க நினைக்காதே", "வெடுக்குநாறி எங்களின் இடம்", "மத சுதந்திரத்தை தடுக்காதே", "தொல்பொருள் திணைக்களமே வெளியேறு", போன்ற கோஷங்களை எழுப்பினர். அத்துடன், அதனுடன் தொடர்புடைய பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

பேரணியாக சென்ற போராட்டக்காரர்கள் மக்கள் மருத்துவமனை சுற்றுவட்ட பகுதியில் அமைந்திருந்த தொல்பொருள் திணைக்களத்தின் பணிமனைக்கு சென்று அதன் வாயிலை மறித்து "தொல்பொருள் திணைக்களமே வெளியேறு", என்று கோஷமிட்டனர்.

சுமார், 15 நிமிடங்கள் வரை குறித்த வாயிலை முற்றுகையிட்ட மக்கள் பின்னர் அங்கிருந்து வெளியேறி மாவட்ட செயலகத்துக்கு சென்றிருந்தனர். அங்கும் வாயிலில் நின்று கோஷங்களை எழுப்பினர்.

இதைத் தொடர்ந்து போராட்டக்காரர்கள் ஜனாதிபதிக்கான மனுவை, மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் பீ. ஏ. சரத் சந்திரவிடமும் ஜனாதிபதியின் வடக்குக்கான இணைப்பாளரும் மேலதிக செயலாளருமான ஈ. இளங்கோவனிடமும் கையளித்தனர்.

ஜனாதிபதிக்கு இந்த விடயம் குறித்து தெரியப்படுத்தி உரிய நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதியின் மேலதிக செயலாளரும் அரச அதிபரும் இணைந்து வாக்குறுதி வழங்கியதையடுத்து போராட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

இந்தப் போராட்டத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம், சாள்ஸ் நிர்மலநாதன், சி.சிறீதரன், செ. கஜேந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சிவசக்தி ஆனந்தன், சி. சிவமோகன், பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள், சமயப் பெரியோர்கள், சமூக ஆர்வலர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள், காணாமல் போன உறவுகளின் சங்கத்தினர், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கவனவீர்ப்பு

முல்லைத்தீவு, மார்ச் 31

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவில் நேற்று கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்தினர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் 2,213 ஆவது நாளாக தொடர் போராட்டத்தை நடத்தினர். இதையொட்டி, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் அலுவலகம் முன்பாக இந்த கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டக்காரர்கள், "ஓ. எம். பியும் வேண்டாம் நட்டஈடும் வேண்டாம்", "மரணசான்றிதழும் வேண்டாம் - இலஞ்சமும் வேண்டாம்", போன்ற கோஷங்களை எழுப்பினர். அத்துடன், சர்வதேச விசாரணையே தமது தீர்வுக்கான ஒரே வழி என்றும் அவர்கள் வலியுறுத்தினர். (ஐ)

# முன்னாள் சபாநாயகருக்கு பாராளுமன்றில் அஞ்சலி!



கொழும்பு, மார்ச் 31

முன்னாள் சபாநாயகரும், அமைச்சருமான மறைந்த ஜோசப் மைக்கல் பெரேராவின் பூதவுடலுக்கு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் நேற்று பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் இறுதி அஞ்சலி செலுத்தியதுடன் இரங்கல் அறிக்கையையும் பதிவு செய்தனர்.

இதனையடுத்து பிரதி சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், கட்சித் தலைவர்கள், முன்னாள் ஜனாதிபதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், இராஜதந்திர அதிகாரிகள், பாராளுமன்ற செயலாளர் குழு மற்றும் செயலகத்தின் பணியாளர்கள் உள்ளிட்டவர்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர். (ஐ)

# சாரா மரணம் தொடர்பான டி. என். ஏ. பரிசோதனை அறிக்கை உண்மையா?

## முஜிபுர் ரஹ்மான் கேள்வி

கொழும்பு, மார்ச் 31

சாரா ஜஸ்மின் தொடர்பில் வெளியாகியுள்ள மூன்றாவது மரபணு பரிசோதனை அறிக்கையும் உண்மையானது என எவ்வாறு உறுதிப்படுத்துவது என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும், 2019 ஏப்ரல் 26ஆம் திகதியன்று சாய்ந்தமருது பாதுகாப்பு இல்லத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது. இதில் உயிரிழந்தவர்களில் சாரா ஜஸ்மின் என்ற புலஸ்தினி மகேந்திரனும் அடங்குகிறார் என்று அரச இரசாயன பகுப்பாய்வாளர் சமர்ப்பித்த அறிக்கையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மூன்றாவது முறையாக பெறப்பட்ட நுண்ணிய மாதிரிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட டி. என். ஏ. பரிசோதனையில் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இது நூற்றுக்கு 99.99 வீதம் உறுதி செய்யப்பட்டுள்ளதாக அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை உறுதிப்படுத்தியுள்ளதாக பொலிஸ் ஊடக பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

சாரா ஜஸ்மின் என்பவர் நீர்கொழும்பு கடுவாப்பிட்டி தேவாலயத்தில் தற்கொலை தாக்குதலை நடத்தியவரின் மனைவி ஆவார். இவரும் ஏப்ரல் மாதம் 26ஆம் திகதியன்று சாய்ந்தமருது பாதுகாப்பு இல்லத்தில் நடந்த தற்கொலை தாக்குதலில் உயிரிழந்தார்.

சாரா ஜஸ்மின், உயிர்த்த ஞாயிறு தற்கொலை தாக்குதல்கள் இடம்பெற்ற காலத்திலிருந்தே குறித்த பெண் தேடப்பட்டு வருகின்றார். அவர் இருக்கின்றாரா, இல்லையா என்பது தொடர்பில் பல்வேறு விடயங்கள் கடந்த காலங்களில் வெளியாகின. முதல் இரண்டு அறிக்கைகளில் அவர் இறக்கவில்லை என்று கூறப்பட்டது. மூன்றாவது மரபணு பரிசோதனை அறிக்கை சாரா ஜஸ்மின் சாய்ந்தமருதில் நடந்த தற்கொலை தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்துவிட்டார் என்று கூறுகின்றது.

எனவே மூன்றாவது மரபணு பரிசோதனை அறிக்கையும் உண்மையானது என்று எவ்வாறு உறுதிப்படுத்துவது? ஏனைய இரண்டு அறிக்கைகளும் தவறானவை புதிய அறிக்கையே உண்மையானது என்று தீர்மானிப்பவர்கள் யார்?

யார் இந்த தீர்மானத்தை எடுத்தார்கள்? அதே போன்று சாரா ஜஸ்மின் தொடர்பில் மூன்று மரபணு பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தவர்கள் யார்? என்று கேள்விகளை எழுப்பினார். (ஐ - கே)

# மரண அறிவித்தல்



## பசில் டெனிந்திரன் றிச்சேட்

யாழ். பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், கனடா ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பசில் டெனிந்திரன் றிச்சேட் கடந்த 26-03-2023 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார், றிச்சேட் ஜோசப் - மரியதிரேஸ் றிச்சேட் தம்பதியரின் மகனும், ஐயாத்துரை - பாக்கியசோதி மரிஸ்ரெலா தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜெயசோதியின் அன்புக் கணவரும், அன்றியன், ஐலீன், ஆஷ்லி ஆகியோரின் அன்புத் தந்தையும் அலன் ஜெனிபேர்ட், கிளெனி வலன்ரைன், பாமினி வினிபிரெட், நகுலன் றெனீந்திரன், ஷெரின் பசிலிக்கா ஆகியோரின் அன்புச் சகோதரரும்,சுனித்தா, நிமலகுமார் கிறிஸ்ரோப்பர், அமலினி சாந்தி, நொறின் கனிஜா, சுஜேந்தி ரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,காலஞ்சென்ற மரியநாயகம், ஜெற்றூட், காலஞ்சென்ற அருளானந்தம், ஜொசஃபீன், காலஞ்சென்ற ஜேசுதாசன், மகாலஷ்மி, காலஞ் சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை, நிலாவதி மற்றும் பிரான்சிஸ், காலஞ்சென்ற ஜெயராணி, தேவராஜா, வாசுகி, பீலிக்ஸ், கமலினி, காலஞ்சென்றவர்களான மார்க்கிறட் பூமணி, இம்மானுவேல் ஆகியோரின் அன்பு மருமகனும், டெனிசியா, ஜோன்சன், எலியாஸ் டேவிட், வினோ, றொகான், மெடோனா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை நாளை (01.04.2023) சனிக்கிழமை காலை 8.00 முதல் நண்பகல் 12.00 மணிவரை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

# நிறுவனங்களை விற்பனை செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை

## கிங்ஸ் நெல்சன் எம். பி.

கொழும்பு, மார்ச் 31

இலாபமீட்டும் அரச நிறுவனங்களை விற்பனை செய்வதற்கு தற்போதைய ஜனாதிபதிக்கு எவ்வித அதிகாரமும் இல்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கிங்ஸ் நெல்சன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும், "இலாபமீட்டும் நிறுவனங்களையே தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் விற்பனை செய்ய முயற்சிக்கின்றது.

இலாபமீட்டும் அரச நிறுவனங்களை விற்பனை செய்யும் முயற்சிக்கு பிரதான எதிர்க்கட்சி என்ற முறையில் நாம் எதிர்ப்பையே தெரிவிக்கின்றோம்.

தற்போது மொட்டுக் கட்சியின் அரசாங்கமே இருக்கின்றது. ஜனாதிபதி மட்டுமே மாறியுள்ளார். சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் எமது நாட்டை நாம் எவ்வாறு முன்னோக்கிக் கொண்டு செல்வோம் என்பது தொடர்பிலேயே அரசாங்கம் என்ற முறையில் சிந்திக்க வேண்டும்.

கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை பொறுப்பேற்றப் பின்னர் நாட்டுக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பில் ஆராய்ந்து பார்க்க வேண்டியது அவசியமாகும்.

வரலாறு தொடர்பில் பேசிக்கொண்டு இருக்காமல் முன்னோக்கி பயணிக்க வேண்டும் என்று ஜனாதிபதி கூறுகின்றார். எனினும் எமது நாடு இன்று ஏன் இவ்வாறான ஒரு நெருக்கடி நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது என்பது குறித்து ஆராய வேண்டும்.

நாட்டின் வீழ்ச்சிக்கு காரணமான அரச அதிகாரிகள் தொடர்பில் நாம் சிந்திக்க வேண்டும்" - என்றும் கூறினார். (ஐ)

# ஆங்கிலம் கற்பித்தல் திட்டம் 13,800 ஆசிரியர்கள் இணைப்பு

## கல்வி அமைச்சர் சுசில்

கொழும்பு, மார்ச் 31

அனைத்து முதலாம் தர பிள்ளைகளுக்கும் ஆங்கில மொழி கற்பித்தல் நேற்று முதல் ஆரம்பமானதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

கங்கொடவில சமுத்திராதேவி மகளிர் ஆரம்பப் பாடசாலையில் நேற்று முதலாம் தரப் பிள்ளைகளுக்கான ஆங்கில மொழிப் பாவனையை ஆரம்பிக்கும் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தத் திட்டத்துக்குத் தேவையான சுமார் 13 ஆயிரத்து 800 ஆரம்ப ஆசிரியர்கள் இதுவரை பயிற்சி பெற்றுள்ளனர்.



இலங்கையில் உள்ள சர்வதேச பாடசாலைகளில் மாணவர்கள் ஆரம்பம் முதலே ஆங்கிலத்தில் கல்வி கற்கவுள் ளனர் என்று தெரிவித்த அமைச்சர், எதிர்காலத் தில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ள ஆங்கில மொழி ஊடான கல்வியை வழங்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

இதன்படி, அடுத்த வருடம் இந்தத் திட்டம் தரம் இரண்டில் இருந்தும், பின்னர் தரம் மூன்றிலிருந்தும் ஆங்கில மொழி மூலமான கல்வி இணைக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 31.03.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.